Registered M. 916.

ஸ்ரீ:.

வேதாந்த தீபிகை

ஸம்புடம் 4.] ஆநந்த ஹூ தை மீ [ஸஞ்சிகை 12.

பத்ராதிபர் :—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

1. பத்ராதிபரின் குறிப்புகள்... ... ... 421.
2. ஸ்ரீ ஸ்தோத்ரரத்நம்
ஸ்ரீ. எஸ். வாஸுதேவாசார்யர் ... ... 439.
3. ப்ரஹ்மஸூத்ரத்தில் ஓர் சோத்யம்
இஞ்சிமேடு. ரங்கநாதாசார்யர் ... ... 447.
4. ஸ்ரீ அஹோபில ந்ருஸிஹ்மன் விஷயம்
ப்ரஹ்லாதன் சரித்திரம் ... ... 452.

ஸ்ரீ அஹோபில மடத்து ஶிஷ்ய ஸபையின் கார்யதர்ஶியால்

ப்ரதி மாஸம் ப்ரசுரம் செய்யப்படும்.

கலாரத்நாகரம் அச்சாபீஸ், சென்னை.

Copy-right reserved.

Annual Subscription Rs. 2-0-0] [Single Copy As. 3.

THE VEDANTA DIPIKA.

A MONTHLY TAMIL JOURNAL

OF

HINDU RELIGION AND PHILOSOPHY.

Editor.—DEWAN BAHADUR T. T. RANGACHARIAR, B.A., B.L.

Vol. 4—No. 12.

January 1915.

NOTICE.

All contributions etc. should be addressed to **The Editor,** Vedanta Dipika, Pallavaram, Chingleput Dist. and all business letters, money orders etc. to **The Manager,** the Vedanta Dipika, Chittoor, Chittoor Dist. Communications intended for publication in the succeeding issue should, as far as possible, reach the Editor not later than the 15th of the month. The Secretaries of affiliated associations are requested to send in every month advertisements and reports of meetings for publication.

Subscribers are requested to send their subscriptions for Vol. 4 as early as possible and to quote the wrapper number in all their communications to the manager. Intending advertisers are requested to apply to the Manager for terms.

☞ பத்ரிகைக்கு விஷயங்கள் எழுதுவது "பத்ராதிபர்" வேதாந்த தீபிகை, பல்லாவரம், செங்கல்பட்டுஜில்லா, என்கிற விலாஸத்திற்கும், கடிதங்கள் அனுப்புவதும், கட்டணம் கட்டுவதும், விலாஸ மாறுதல்கள் அறிவிப்பதும், மற்றெல்லா விஷயங்களும், விலாஸத்தில் குறித்திருக்கும் நம்பரைக் கண்டு, "**மானேஜர், வேதாந்த தீபிகை,** சித்தூர், சித்தூர் ஜில்லா" என்கிற விலாஸத்திற்கும் அனுப்பப்படவேண்டும்.

ஒவ்வொரு மாஸத்திலும் 15உக்குள் கிடைக்கும் விஷயங்கள்தான் அந்தந்த மாஸத்து ஸஞ்சிகையில் ப்ரசுரம் செய்யப்படும். ப்ரதி மாஸமும் பிரிவுகளின் கார்யதர்ஸிகள் அங்கங்கு நடக்கும் விஸேஷ வ்ருத்தாந்தங்களை தீபிகையில் ப்ரசுரம் செய்யும்பொருட்டு எழுதி அனுப்பவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம். சந்தா தாரர்கள் எல்லாரும் நான்காவது வருஷச் சந்தாவை விளம்பமில்லாமல் அனுப்பவேண்டு மென்று ப்ரார்த்திக்கிறோம்.

வருஷம் 1-க்குக் கட்டணம் ரூபாய் 2.

4 55

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

வேதாந்த தீபிகை

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 4.] ஆநந்த௵ தைமீ [ஸஞ்சிகை 12.

பத்ராதிபரின் குறிப்புகள்.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே - வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

தை மாஸம். இதற்குத் தை மாஸமென்றும், புஷ்ய மாஸமென்றும், மகர மாஸமென்றும் பெயர் வழங்குகின்றது. மார்கழி மாஸம் முடிவான தினமும், புஷ்யமாஸத்தின் முதல் தினமும் ஆர்யநாட்டில் ப்ரஜைகள் ஸந்தோஷிக்கும் உத்ஸவ தினங்கள். 1800 - வருஷத்துக்கு முற்பட்டும், தமிழ்நாட்டில் ஸங்க்ராந்தி தினத்தில் இந்த்ரன் ஸம்பந்தமாக ஜநங்கள் உத்ஸவம் கொண்டாடினர் என்று சிலப்பதிகாரம் முதலான புஸ்தகங்களால் தெரிகின்றது. மார்கழியும் தையும் ஆர்யஜநங்கட்கு கேவலம் உத்ஸாஹ மாஸங்களெனத் தெளியக் கூடாது. இந்த மாஸங்கள் யாவர்க்கும் பரமச்ரேயஸ்ஸைக் கொடுக்கவல்ல சரித்ராம்சங்களைத் தாங்கி நிற்கின்றன. அவற்றைக் குறித்துச் சிறிது விசாரிப்போம்.

மார்கழிமாஸத்துடன் தக்ஷிணாயநம் முடிவுறுகின்றது. இது தேவலோகவாஸிகளுக்கு ஓர் இரவு. அவருடைய பகல், ஸங்க்

436

ராத்தி திநம் ஆரம்பிக்கின்றது. இந்தப் பகற்கு உஷ:காலம் மார்கழிமாஸம். உஷ:காலம் பகவத்ஸ்மரணத்துக்கு மிகவும் பொருந்திய காலம் என்பது யாவர்க்கும் தெரிந்த விஷயம். இதற்காகத்தான் மார்கழித்திங்கள் முழுதும் பகவத் ப்ரஸாதத்தை வேண்டுபவர் பகவானுக்கென்றே கழிக்கின்றார். அம்மாஸத்தின் உஷ:காலங்கள் முக்யமாகப் பகவானுடைய ஸ்மரணத்தில் செலுத்தப்படவேண்டும்.

'தத்கர்ம யந்ந பந்தாய ஸா வித்யா யா விமுக்தயே' என்கிற வசநப்படி, வித்யை என்றால், மோக்ஷத்தைக் கொடுக்கின்றது தானென்பதும், கர்மம் என்றால், நிஷ்காமத்துடன் பகவத்ப்ரீணநமாகச் செய்வதுதானென்பதும், நம் பெரியோர் நமக்குக் காட்டியிருக்கின்றனர். கர்மம் வித்யாங்கமாகின்றது. வித்யை நிலைத்தபின் அதற்குரித்தாகக் கர்மமும் ஏற்படும். இந்த உண்மையைப் பகவான் ஸ்வயம் நமக்குத் தமது திவ்யசரித்ரங்களால் காட்டியுளர். அதைச்சற்று யோசிப்போம்.

அம்மாஸம் ஸீதையைப் பகவான் சிறை மீட்டது.

லங்கையில் சிறைப்படுத்தப்பட்ட ஸீதைக்கு, அந்தச் சிறைக் காலம் முழுவதும் ஓர் கொடிய ராத்ரி. 'காலராத்ரீதி தாம் வித்தி ஸர்வலங்காவிநாஶிநீம்', என்று ஸீதையையே ராமாயணத்தில் ஹநுமத்வசநத்தால் வர்ணித்திருக்கின்றது. அந்த லோகமாதாவுக்குக் காளராத்ரியாக இருந்த காலம், இலங்கைக்கும் அப்படியே ஆயிற்று. மார்கழிமாஸம் அதற்கு உஷ:காலம். அப்போது ஸ்ரீராமதூதன் ஸ்ரீராமனுடைய வ்ருத்தாந்தத்தைப் பற்றி ஸீதையினிடம் ஸம்பாஷித்தனன். அப்போது,

'வக்த்ரம் தத்வதநம் தஸ்யா: தாம்ரஶுக்லாயதேக்ஷணம் ।
ஸுகேஶாந்த விஶாலாக்ஷ்யா: ராஹோர்முக்தமிவோடுராட்' ॥

"விசால நேத்ரங்களுடன் கூடிய ஸீதையினுடைய செவ்வரியோடி வெளுத்து நீண்ட கண்களால் அலங்க்ருதமான அந்த மனோக்யமான முகமானது ராஹுவால் விடப்பட்ட சந்த்ரனென ஶோபித்தது." பதிவ்ரதைக்குப் பதிவிஷயமாகப் பாரதந்த்ரியத்தைப் பாராட்டல் ஓர் வ்ரதம். ஆதலால் பதியினுடைய ஆஜ்ஞையைப்

எதிர்பாராமல், தனக்கு ஹிதமாயிருந்தபோதிலும், தானாக ஒன்றும் பதிவ்ரதை செய்யமாட்டாள். இதனோடு, ஸீதை தனது சிறையையே தான் பதியுடன் சேரவேண்டுமென்பதையே ப்ரயோஜநமாக உத்தேசித்து ஓர் தபஸாகக் கொண்டனள். அந்தத் தபஸ்ஸைக் காப்பாற்றவெண்ணியும், பதியின் ஆஜ்ஞை யில்லாதபடியாலும், 'அஸந்தேஶாத்து ராமஸ்ய தபஸஶ்சாநுபாலநாத் ; நத்வாம் குர்மி தஶக்ரீவ பஸ்ம பஸ்மார்ஹதேஜஸா' ॥ என்று ராவணனை நோக்கிச் சொன்னபடி, அவனைப் பிராட்டி சாம்பலாகப் போகும்படி ஸங்கல்பித்தாளில்லை. இப்படிப்பட்ட கஷ்டமான வ்ரதத்தையும் தபஸ்ஸையும் அநுஷ்டித்துத் தான் சிறைநின்ற காலமாகின்ற இராமுழுதும் பிராட்டி போக்கினள். இதற்கு உகந்தருளிய ஶரண்யன், ஸம்ஸாரமாகின்ற காளராத்ரிக்கு உஷ:காலம் போன்ற ஶரணகதி மந்த்ரம் அகிஞ்சநனை முமுக்ஷுவுக்கு ப்ராப்தமாவது போல், லங்காவாஸமான காளராத்ரிக்கு விடியற்காலம்போன்ற மார்கழிமாதத்தில், தன் ப்ரியதூதன் மூலமாகத் தனது வ்ருத்தாந்தம் ஸீதைக்கு ப்ராப்தமாகும்படிப் பண்ணினான். இது பிராட்டி ப்ரார்த்தித்துக்கொண்டிருந்த பதிஸங்கமமாகின்ற சுபத்தை ஸூசிப்பித்தது.

ஹநுமான், 'அஹம் ப்ரஸ்ரவணஸ்தாய ராகவாயாத்ய மைதிலீம் । ப்ராபயிஷ்யாமி', என்று பிராட்டியை ராகவனிடம் தானே கொண்டுபோய்ச் சேர்ப்பதாகச் சொல்லவும், பகவதாஜ்ஞையை எதிர்பார்த்த ஜாநகியும், லோகத்துக்கும் தனக்கும் ஸ்வாமியான பகவான் விஷயத்தில் அஸஹ்யமான அபராதத்தைப் புரிந்த ராவணன் அவனாலேயே தண்டிக்கத்தக்கவனாதலால், ஹநுமத் வசநத்தைத் தான் ஆதரிப்பதால் 'ராகவஸ்ய யஶோ ஹீயேத' (ராகவனுடைய யஶஸ் குறையும்) என்றெண்ணியும், 'பர்த்ருபக்திம் புரஸ்க்ருத்ய ராமாதந்யஸ்ய வாநர । நஸ்ப்ருஶாமி ஶரீரம்', என்று, தான் பதிவ்ரதையானபடியால், ஸ்ரீராமனுடைய காத்ரம் தவிர மற்றவர் சரீரத்தைத் தொடக்கூடாதெனும் நியமத்தைச் சிந்தித்தும், ராவணனுடைய தேஹஸ்பர்ஶம், தான் அநீஶையாயும் விவஶையாயு மிருந்தபடியால், நேரிட்டதென்றும் ஸமா

தாநம் சொல்லி, 'ஶரைஸ்து ஸங்குலாம் க்ருத்வா லங்காம் பரபலார்தந: । மாம் நயேத்யதி காகுத்ஸ்த: தத்தஸ்ய ஸத்ருஶம் பவேத்' ॥ என்று, அபராதியை ஸமூலமாகக் கொன்று, பின் தன்னை அழைத்துக்கொண்டுபோனல் அது ராகவனுக்குப் பொருந்தி நிற்கும் என்று முடிவாகச் சொன்னுள். அவளுடைய அத்யவஸாயத்தைப் பஹுமாநித்த லோகநாதனும் ராவணன் ஊரை நாசமாகச் செய்து பிராட்டியை அழைத்துக்கொண்டு போனுன். ராவண ஸம்ஹாரம் தை அமாவாஸ்யை திநம் நடந்தது. பிராட்டியும் ப்ராணநாதனைச் சேர்ந்த மாஸம் இதுவே. ஆகவே ஹேமந்துருதுவின் மாஸங்களிரண்டிலும், ஸீதையினுடைய சித்தவ்ருத்தியானது அவள் பகவத் ப்ராப்தியினிமித்தம் உபாயமாகக் கொண்டதைகஶேஷத்வரூபமான ஜ்ஞாநவிசேஷத்தையும், அவளுடைய அநுஷ்டாநங்கள் அந்த ஜ்ஞாநோசிதமாகப் பகவான் உகப்பையே பலமாக எண்ணிச்செய்த அவளது கர்மவிசேஷங்களையும் நன்கு ப்ரகாசிப்பிக்கின்றன.

'காத்யாயனி மஹாமாயே மஹாயோகின்யதீஶ்வரி ।

அந்த மாஸம் நந்தகோபஸுதம் தேவி பதிம் மே குரு தே நம:' ॥ கோபீ ஜநங்களுக் எனும் தேவிப்ரார்த்தநா கர்ப்பமான மந்த்ரத்தைக்குப் பகவான் அநு கொண்டு, ஸ்ரீ க்ருஷ்ணன் தமக்குப் பதியாக க்ரஹம் செய்தது. வேண்டுமென்று எண்ணிக் கோபகந்யைகள் மார்கழிமாஸம் முப்பதுநாள்களும் வ்ரதமிருந்தனர்.

'உஷஸ்யுத்தாய கோத்ரைஸ்ஸ்வைரந்யோந்யாபத்தபாஹவ: ।

க்ருஷ்ணமுச்சைர்ஜகுர்யாந்த்ய: காளிந்த்யாம் ஸ்நாதுமந்வஹம்' ॥

"விடியற்காலம் ஒருவரை யொருவர் பெயரால் கூப்பிட்டு எழுப்பி, ஒருவர்க்கொருவர் கைகளைப் பிடித்துக்கொண்டு, குரலெடுத்து க்ருஷ்ணனைப் பாடிக்கொண்டு யமுநாநதியில் ஸ்நாநம் செய்ய நித்யம் சென்றனர்."

" மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னுளால், நீராடப் போதுவீர் போதுமினே நேரிழையீர், சீர்மல்கு மாய்ப்பாடிச் செல்வச் சிறுமியர்காள், கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன், ஏரார்ந்த கண்ணி யசோதை யிளஞ்சிங்கம், கார்மேனிச்செங்

கட் கதிர்மதியம் போன்முகத்தான் – நாராயணனே நமக்கே பறை தருவான்” எனும் பாசுரத்தின் அர்த்தம் மேலெழுதிய ஶ்லோகத்தில் விளங்குகின்றது.

‘𑌭𑌗𑌵𑌾𑌂𑌸𑍍𑌤𑌦𑌭𑌿𑌪𑍍𑌰𑍇𑌤𑍍𑌯 𑌕𑍃𑌷𑍍𑌣𑍋 𑌯𑍋𑌗𑍇𑌶𑍍𑌵𑌰𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 ।
𑌵𑌯𑌸𑍍𑌯𑍈𑌰𑌾𑌵𑍃𑌤𑌸𑍍𑌤𑌤𑍍𑌰 𑌗𑌤𑌸𑍍𑌤𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌸𑌿𑌦𑍍𑌧𑌯𑍇 ॥’

“யோகம் எவன்பொருட்டுச் செய்கின்றனரோ, நிஷ்பங்க யோகிகளாய் யோகேஶ்வரர்களெனப்படுபவர்க்கு எவன் ஈஶ்வரனும் புருஷார்த்த ப்ரதனுமாகின்றானோ, அந்தப் பகவான், அந்தக் கந்யைகள் அபிப்ராயம் அறிந்தவனாய்க்கொண்டு, அவர் ஆசரித்த வ்ரதத்துக்கு யதோசிதம் பலமளிக்க ஸங்கல்பித்து, தன் தோழருடன் அவ்விடம் சென்றனன். அவனுக்கும் அப்போது வயஸ்ஸோ ஏழுதான். ஆயினும் ‘𑌗𑍂𑌢𑌯𑍌𑌵𑌨𑌾𑌯𑌮𑌾𑌨𑍇𑌣 𑌵𑌾𑌸𑌾𑌂𑌸𑍍𑌯𑌪𑌹𑌷𑍍𑌟𑍍𑌵𑌾𑌵𑌹𑌾𑌰𑌿’ யாயிருந்தான். கோபகந்யைகள் தங்கள் வழக்கப்படி வஸ்த்ரங்களை நதியின் கரைமேல் வைத்துவிட்டு, விவஸ்த்ரர்களாய் நதியில் நீராடினார்கள். இது துராசாரம்: பாபதுல்யம்: பகவதபசாரம். ஆதலால் அவர் கொண்ட வ்ரதத்தை வ்யர்த்தமாகச் செய்தது. ஆனாலும், பகவான் அவர்களுடைய (𑌶𑍁𑌦𑍍𑌧𑌭𑌾𑌵 𑌵𑍍𑌯𑌾𑌜𑌿𑌤𑌃) நல்லெண்ணத்தால் கருணைகொண்டு, கிஞ்சித் அவர்களைப் பரிஹஸிப்பவன்போல் நடித்துவிட்டு, ‘𑌯𑍂𑌯𑌂 𑌵𑌿𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌾 𑌯𑌦𑌪𑍋 𑌧𑍃𑌤𑌵𑍍𑌰𑌤𑌾 𑌵𑍍𑌯𑌗𑌾𑌹𑌤𑍈𑌤𑌤𑍍𑌤𑌦𑍁 𑌦𑍇𑌵𑌹𑍇𑌲𑌨𑌮𑍍 । 𑌬𑌦𑍍𑌧𑍍𑌵𑌾𑌞𑍍𑌜𑌲𑌿𑌂 𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌨𑍍𑌯𑌪𑌨𑍁𑌤𑍍𑌤𑌯𑍇𑌂𑌹𑌸𑌃 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌨𑌮𑍋𑌧𑍋𑌵𑌸𑌨𑌂 𑌪𑍍𑌰𑌗𑍃𑌹𑍍𑌯𑌤𑌾𑌮𑍍’ । “நீங்கள், வ்ரதத்தில் நின்றவராய்க்கொண்டு, வஸ்த்ரமின்றி ஜலத்தில் நீராடினீர்கள் என்கிற இது பகவதபசாரம்; உங்கள் வ்ரதத்தை இது வீணாக்கிவிட்டது. இந்தப் பாபநிவ்ருத்தியின்பொருட்டுச் சிரஸ்ஸின்மேல் அஞ்ஜலிஸஹிதமாக நமஸ்காரம்செய்து, பின் உங்கள் வஸ்த்ரங்களைப் பெற்றுக்கொள்வீர்கள்” என்று மொழிந்தனன். க்ரமேண அவர்கள் அஜ்ஞாநநிமித்தமாகச் செய்த அக்ருத்யங்களை, அவர்களுடைய அஞ்ஜலிமாத்ரத்தால் க்ஷமித்தருளி, அவர்கள் தேவதாந்தரோ

பாஸ்திசெய்தனராயினும், 'தேவி காசேவ ஹஜம் த்ருவிபியிவத்ஸகம்', என்று அவர் பூஜையை அங்கீகரித்தவனுய்க்கொண்டு, 'தாஸாம் விஜ்ஞாய பகவாந் ஸ்வபாதஸ்பர்ஶகாம்யயா । த்ருதவ்ரதாநாம் ஸங்கல்பம்,' எனும்படி, உமக்கே நாமாட்செய்வோம் என்று வ்ரத மிருந்த அவர்களுடைய ஸங்கல்பத்தைப் பகவான் அறிந்து,

'ஸங்கல்போ விதித꞉ ஸாத்வ்யோ பவதீநாம் மதர்சநம் ।
மயாநுமோதித꞉ ஸோ(அ)ஸௌ ஸத்யோ பவிதுமர்ஹதி ॥
ந மய்யாவேஶிததியாம் காம꞉ காமாய கல்பதே ।
பர்ஜிதா꞉ க்வதிதா தாநா꞉ ப்ராயோ பீஜாய நேஷ்யதே ॥
யாதாபலா வ்ரஜம் ஸித்தா மயேமா ரம்ஸ்யத க்ஷபா꞉ ।
யதுத்திஶ்ய வ்ரதமிதம் சேருரார்யார்சநம் ஸதீ꞉ ।'

"ஸத்வ்ருத்தத்துடன் கூடின பெண்களே! எனக்கே பணிவிடை செய்ய வேண்டுமெனும் உங்களுடைய மநோரதம் எனக்குத் தெரிந்தது; அது என்னுல் அங்கீகரிக்கவும் பட்டது. ஆனபடியால் அது ஸத்யமாகத் தக்கதே. ஆகிலும் என்னிடம் புத்தியைச் செலுத்துகிறவர்களுடைய காமமானது அதன் பலமாகின்ற போகாநுபவத்தின் பொருட்டுப் பரிணமிப்பதில்லை. (ஏனென்றுல், என்னிடம் ப்ரேமை கொண்டால் அது காமத்தால் தூஷிதமான மநஸ்ஸினின்று காமத்தை நிவர்த்தித்துவிடும்.) வறுத்த தாந்யமும் சமைத்த தாந்யமும் விதைகளுக்கு இச்சிக்கப்பட மாட்டா. பெண்களே! பூர்ணமநோரதர்களாக வ்ரஜம் செல்லுங்கள். எதை உத்தேசித்து இந்த வ்ரதத்தை அநுஷ்டித்தீர்களோ அதற்காகப் வரப்போகின்ற ராத்ரிகளில் என்னுடன் விளையாடிக் களிப்பீர்கள்" என்று சொன்னுன். அதைக்கேட்டு ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமியர்கள் பகவானுடைய பாதகமலங்களை த்யாநித்துக்கொண்டு, அவ்வவர் வீடு சென்றனர். இது நடந்தது போகி பண்டிகை திநம்.

பகவானும், இதர கோபால குமாரருடன் பசுக்களை நடத்திக்கொண்டு போய், யமுநா நதிக்கரையில் ஓர் உபவநத்தில்

யதேச்சையாக ஸஞ்சரித்துவிட்டு, நதியில் மதுரமான நீருருந்தி உட்கார்ந்தனன். கோபாலகுமாரர் பசியால் வருந்தினர்கள். பகவானும் ஸமீபதேசத்தில் ப்ராஹ்மணர்கள் யாகம் செய்து கொண்டிருக்கின்றார்கள் என்றும், அவரிடம் தன் நாமத்தைச் செப்பி, யாவர்க்கும் அந்நம் கேளுங்கள் என்றும் சொல்லிக் கோபாலரை அவரிடம் அனுப்பினன். கோபாலகுமாரரும் பகவத் வசநத்தை ஸவிநயமாக யாகக்ரஹத்தில் உட்கார்ந்திருந்த விப்ரர்களிடம் தெரிவித்தார்கள். விப்ரர்களோ அவர்கள் சொல்லைக் கேட்டும் கோளாததுபோல் மௌநமாக இருந்து விட்டனர். இடைப்பிள்ளைகள் நடந்ததை நடந்தவண்ணம், ஸ்ரீக்ருஷ்ணன் ஸந்நிதியில் விஜ்ஞாபநம் செய்தனர். பகவான் சிரித்துவிட்டு, அந்தச் சிறுவர்களை மறுபடியும் அந்த விப்ரர்களுடைய பத்நீகளிடம் அனுப்பினன். சிறுவர் பத்நீசாலைக்குச் சென்று, ஸமீபத்தில் ஸ்ரீ க்ருஷ்ணன் இருப்பதையும், தங்களுக்கும் ராம க்ருஷ்ணர்களுக்கும் அந்நம் வேண்டுமென்பதையும் விப்ரஸ்த்ரீகளிடம் சொன்னார்கள். நீண்டகாலமாகப் பகவானுடைய திவ்ய சேஷ்டிதங்களைப்பற்றிச் செவியுற்று, அவனைத் தர்ஶிக்க வேண்டுமென்று ஸதா சிந்தித்துக்கொண்டிருந்த அந்த ஸ்த்ரீகள், கோபால குமாரர் சொன்னதைக் கேட்டவுடன் மிகவும் ஆநந்தங் கொண்டு நாலுவிதமான அந்நங்களை யெடுத்துக் கொண்டு புறப்பட்டனர். பதி ஸுத ஸஹோதரர்களுடைய தடையையும் அவர் மதித்திலர். யமுனையின் உபவநம் சென்று, அவ்விடம் துளிர்மிகுந்த அஶோக வ்ருக்ஷங்களின் கீழ் ராமனுடனும் கோபாலகுமாரர்களுடனும் ஸஞ்சரித்துக் கொண்டிருந்த யமுனைத் துறைவனைத் தர்ஶித்தனர்.

ஶ்யாமஸுந்தரன் பீதாம்பரதாரியாய், வநமாலை, மயிற்றோகை, பவழக்கொடி முதலானவற்றால் அலங்க்ருதனாய், ஒரு கையைப் பக்கல் நின்றவன் தோளின்மேல் வைத்து, மற்றொன்றால் தாமரைப்புஷ்பத்தைச் சுழற்றிக்கொண்டு, காதுகளில் நீலோத்பலமும், கன்னங்களில் முன்னெற்றிமயிரும், முகாரவிந்தத்தில் புன்னகையும் ப்ரகாசிக்கத் தோன்றினன். முன்பே, அவன் ரூப சேஷ்டிதங்களைக் கேட்டு அவற்றின் த்யாநத்தில் மூழ்கிநின்ற மநஸ்ஸுடன்கூடிய அந்த ப்ராஹ்மணஸ்த்ரீகள், பகவானைத் தங்களுடைய நேத்ரங்கள்மூலமாக ஹ்ருதயங்களில் ப்ரவேசிப்பித்து, அவ்

விடம் அவனை நிலைக்கச்செய்து, மநஸ்ஸால் அவனை ஆலிங்கநம் செய்து, தாமவனைத் தர்சிக்கவேண்டுமென்று நீண்டகாலமாய்க் கொண்ட தாபத்தைப் போக்கினார்கள். இப்படி நின்றவரைப் பரமாத்மா பார்த்து "உங்களுக்கு நல்வர வளிக்கின்றேன். உட்காருங்கள். உங்கட்கு நான் யாது செய்யப்போகின்றேன்! என்னைக் காண இச்சித்து வந்தீர்கள்! இது உங்கட்குத் தகுந்ததே. பரம புருஷார்த்தம் அறிந்த விவேகிகள் பலாபிஸந்தியற்ற நிரந்தர பக்தியைத் தம்முடைய ஆத்மாவும் தமக்கு ப்ரியனுமான என்னிடம் ஸாக்ஷாத்தாகச் செய்கின்றனரன்றோ? யாதொருவர்க்கு என்ஸம்பந்தத்தினால், அதாவது என்னுடைய ஆராதநத்துக்கு உபகரணமாயிருத்தலால், இந்த்ரியங்கள், மநஸ், புத்தி, தேஹம், பதி, பத்நீ, புத்ரர்கள், தநம் முதலான ஸர்வமும் ப்ரியமாகின்றனவோ, அவர்க்கு என்னைக்காட்டிலும் ப்ரியன் யார் உண்டு? உங்களுடைய பர்த்தாக்கள் உங்களுடன்கூடி யாகத்தை முடிக்கப்போகின்றனர். நீங்கள் புறப்பட்டுப் போகலாம்" என்று மொழிந்தான். விப்ரபத்நிகள் தமது பர்த்தா முதலானவர், அவரை அநாதரித்து வந்த தம்மை அங்கீகரிக்க மாட்டாரெனும் ஶங்கையாலும், பகவத் கைங்கர்யத்தையே உத்தேசித்துத் தாம் வந்தபடியாலும், ஸர்வலோகநாதனை விட்டுப்போக இசையவில்லை. அவர்க்கு, ஸ்வாமி, அவருடைய பதி புத்ர ஸஹோதராதிகள் அநுகூலராகவே இருப்பாரென்பதை வற்புறுத்தி, தன்னைப்பற்றிக் கேட்பதாலும், தன்னைத் தர்சிப்பதாலும், த்யாநிப்பதாலும், தன் நாமங்களைக் கீர்த்தநம் செய்வதாலும் உண்டாகும் குணம், ஸமீப வாஸத்தால் உண்டாகாதென்றும், மநஸ்ஸைத் தன்னிடம் செலுத்துவதால் தனது ஸாயுஜ்யம் அவர்க்குக் கிடைக்குமென்றும் சொல்லி, அவர்க்கு விடையளித்தான். தங்கட்குக் கிடைக்காத பாக்ய விசேஷத்தைத் தங்களைக் காட்டிலும் மிதஜ்ஞரான ஸ்த்ரீகள் அடைந்தார்களென்றும், பகவந்மாயையால் தம்முடைய புத்தி தூஷிக்கப்பட்டதென்றும் சிந்தித்து, விப்ரர்களும் அநுதாபம் கொண்டனர்.

பிறகு, பகவான் ஸஞ்சரித்துக்கொண்டுபோய், ஸங்க்ரமண திநம் செய்யவேண்டிய இந்த்ரபூஜையின் நிமித்தம் ப்ரயத்நபரர்களாக மலையினருகே இருந்த கோபர்களைப்பார்த்து, அவர்கள் ப்ரயத்நத்தின் உத்தேசத்தை யறிந்து, அவர்கள் ஆரம்பித்த இந்த்ர

பூஜையை விலக்கிப் பசுக்களுக்குப் புல் மிகவும் கொடுத்த கோவர்த்தநகிரிக்குப் பூஜை செய்யும்படி அவர்க்குச் சொன்னான். அவரும், அவ்வண்ணம் புரியத் தானே பர்வதாபிமாநிதேவதையாக ரூபீகரித்து நின்று, பகவான் அவர் பூஜையை அங்கீகரித்தனன். இப்படி ஸங்க்ராந்தி பூஜை நிறைவேறியது. ஜ்ஞாதாவான போதிலும், ப்ரக்ருதி ஸம்பந்தத்தால் கதாசித் அஹங்கார தூஷிதமான அந்தஃகரணத்துடன்கூடின இந்த்ரனும் கோபங்கொண்டு, ஸப்தாஹம் மேகங்களை வர்ஷிக்கச்செய்து, பூமியில் வெள்ளம் பெருகச் செய்தனன். பகவான் கோவர்த்தந பர்வதத்தை லீலையாகத் தூக்கி, அதன் கீழ் விபுலமான குஹையில், கோபஜநங்களும் கோக்களும் நிர்ப்பயமாக இருக்கச்செய்தனன். இந்த்ரனும் கர்வபங்கமடைந்து, பகவானுடைய தத்வஸ்வரூபம் அறிந்து, அபராதக்ஷாபணம் செய்துகொண்டு போயினன். கோபஜநங்களும் ஸ்வக்ருஹங்களைப் போய்ச்சேர்ந்தனர்.

பகவானும், தான் கோபகந்யைகட்குச் சொன்ன வசநத்தை ஸத்யமாக்க உகந்தருளி, யமுநாதீரம் சென்று, வநப்ரதேசத்தில் பூர்ண சந்த்ரன் வெண்ணிலா விரிக்கும் இரவில், ஸர்வலோக மநோஹரமாக வேணுகாநம் செய்தனன். இதைக்கேட்ட கோபஸ்த்ரீகள், தமது ஸர்வகார்யங்களையும் விட்டுவிட்டு, அவன் நின்றவிடத்தை நோக்கிச்சென்றனர். அன்றிரவு பகவான் அவர்களுடன் சிறிது காலம் ஸந்தோஷத்துடன் விளையாடிவிட்டு அந்தர்த்தாநம் செய்தனன். அவர்களுக்குப் பஶ்சாத் பாவியான விப்ரகர்ஷத்திலேயே ஜநிக்கும் பகவானுடைய நிரந்தர த்யாநத்தைத் தத்காலத்தில் கிஞ்சித் காட்டவேண்டுமென்று திருவுள்ளம்பற்றி அப்படிச் செய்தானன்றோ? அதனால் கோபிகாகீதை யெனும் பகவத்விஷயமான ஶ்லோகரத்நங்கள் லோகத்துக்குக் கிடைத்தன. "உன் கைங்கர்யார்த்தம் ப்ராணதாரணம் செய்கின்ற உனது தாஸஜநங்களான நாங்கள் உன்னை நாற்புறமும் தேடுகின்றோம். ப்ரிய! உனது தர்சநம் கொடு. நீ கோபாலர் குமாரனன்று; லோகரக்ஷணார்த்தம், பிதாமஹனுடைய ப்ரார்த்தநையை அங்கீகரித்து, ஸாத்வதகுலத்தில் அவதரித்த ஸர்வாத்மாக்களுடைய மநோகதங்களை ஸாக்ஷாத்கரிக்கின்ற பரமேஶ்வரன். உன்னைச் சரணமடைந்தவர்க்கு ஸம்ஸார பயத்தை நிவர்த்திக்கின்றதும் ஸர்வகாமப்ரதமுமான உனது அபயஹஸ்தத்தை எங்கள் ஶிரஸ்ஸின்மீது

வைக்கமாட்டாயோ? உனது கிங்கரீகளான எங்கட்கு உன் எழின் முகத்தைக் காட்டுவாய். ப்ரணதாளுடைய பாபங்களை நசிப்பிப்பதும், காளீயன் படத்தின்மேல் விளையாடியதுமான உன் திருவடிகளை எங்கள் சிரஸ்ஸின்மீது வைத்து எங்கள் ஹ்ருதய தாபத்தைப் போக்கு. ஓ புண்டரீகாக்ஷ! ஜ்ஞாதாக்கள் மகிழ்கின்ற உன் மதுரவசநங்களால் உன்தாஸ ஜநங்களான நாங்கள் மோஹம் அடைந்தோம். ஸம்ஸார தாபத்தால் வருந்தியவர்க்கு ஆத்மோஜ்ஜீவநத்தைத் தருவதும், என்றும் கவிகளால் வர்ணிக்கப்பட்டதும், கேட்பவர்க்குப் பாபநிவர்த்தித்வாரா மங்களத்தைத் தருவதுமாகிய உனது கதையாகின்ற அம்ருதத்தை வர்ஷிப்பவரன்றோ கொடையில் பெருத்தவர்! அந்த அம்ருதபாநம் செய்து நாங்கள் உன்னை நாடுகின்றோம். ஓ ப்ரிய! உனது புன்சிரிப்பும், ப்ரேமகர்ப்பமான பார்வையும், சிந்திப்பவர்க்கு ச்ரேயஸ்ஸைத் தரும் விளையாட்டும், ஸங்கேத சேஷ்டைகளும், நினைக்க நினைக்க எங்கள் மநஸ்ஸுக்களைக் கலக்குகின்றன. ஓ காந்த! பசுக்களை ஓட்டிக்கொண்டு நீ காட்டிற்குச் செல்ல, உனது தாமரையடிகளைக் கற்களும் முட்களும் வருத்துமே யென்று எங்கள் மநஸ்ஸுக்கள் தளர்கின்றனவே. ஸாயங்காலம் நீ வீட்டுக்குத் திரும்புங்கால், உனது பங்கயம்போன்றதும், நீலமான அளகங்களால் சூழப்பட்டதும், கோதூளிகளால் வ்யாப்தமானதுமான முகத்தைக் கண்டு கண்டு உன்னிடம் நாங்கள் காமுற்றோம். பகலில் நீ காட்டுக்குச் சென்றால், உன்னைக் காணாத ஒவ்வொரு க்ஷணமும் எங்கட்கு யுகமாகின்றதே. குடில குந்தலங்களால் அலங்க்ருதமான உன் எழின்முகத்தைப் பார்க்கும் எங்கள் கண்கட்கு இமைகள் அளித்த பிரமனும் மூடனெனத் தோற்றுகின்றான். பதி ஸுத ஸஹோதராதி பந்து வர்க்கங்களை த்யஜித்து, உன் காநத்தால் மோஹிதரான நாங்கள், உன்னிடத்தைத் தேடிவந்தோமே. இப்படிப்பட்ட பெண்களை இருட்டில் விட்டுச்சென்றாயே. அப்படிப்பட்ட உன் தாஸஜநங்களை நீ இப்படி வருத்தலாமா? நீ எங்கள் ஆய்ப்பாடிக்கு வந்த காரணத்தால், எங்களுடைய ஸர்வ பாபமும் நசித்துப்போய்விட்டதே. ஸர்வத்ர மங்களமுண்டாயதே. உன்னிடம் ப்ரேமையே ரூபீகரித்ததென நாங்கள் இருக்கின்றோமே. எங்கள்மீது உனது கார்ப்பண்யத்தைக் கொஞ்சம் விலக்கமாட்டாயோ?"

இவ்வண்ணம் கோபிகள் பாடிப் புலம்ப, ஸ்ரீக்ருஷ்ணன் ஸாக்ஷாத் மன்மதனுக்கும் மன்மதனெனப் புன்னகை விகஸித்த முகாரவிந்தத்துடன் அவர்கள்முன் ப்ரஸந்நமானான். அவருடன் ராஸக்ரீடை முதலான லீலைகள் விளையாடினான். அவர்க்குத் தன் விரஹம்தான் முடிவில் ப்ராப்தமாகுமென்றும், அதனால் தான் அவர் நற்கதியைப் பொருந்துவார்களென்றும் காட்ட, 'நாஹம் து ஸக்ய: ஹஜம் தாவி ஜந்தூந் ஹஜாம்யமீஷா மநுவ்ருத்திவ்ருத்தயே', "ஸகிமார்களே! ஜந்துக்கள் என்னைப் பஜித்தபோதிலும் என்னை அவர் நிரந்தரம் த்யாநிக்க வேண்டுமென்று எண்ணி அவர்முன் நான் ஆவிர்ப்பவிப்பதில்லை" என்றருளிச்செய்து, முடிவாக, 'நபாரயேஹம் நிரவத்யஸம்யுஜாம் ஸ்வஸாதுக்ருத்யம் விபுதாயுஷாபி வ: ; யா மாபஜந் துர்ஜரகேஹஸ்ருங்கலா: ஸம்வ்ருஸ்ச்ய தத்வ: ப்ரதியாது ஸாதுநா ॥' "நீங்கள் அறுக்கக் கூடாத க்ருஹம் எனப்பட்ட சங்கிலியை நன்றாக அறுத்துவிட்டு என்னை அடைந்தீர்களன்றோ? அப்படி என்னை நிஷ்கபடமாகப் பஜிக்கின்ற உங்களுக்கு ப்ரத்யுபகாரம் செய்ய எனக்குத் தேவர்களுடைய ஆயுஸ் கிடைத்தாலும் நான் ஸக்தன் அல்லேன். ஆதலால் உங்களுடைய ஸாதுக்ருத்யமே உங்களுடைய ஸௌசீல்யத்துக்கு (நன்னடத்தைக்கு) என்னால் செய்யவேண்டும் ப்ரத்யுபகார ஸ்தானத்தில் நிற்கட்டும்" என்று அவர்க்குப் போதித்தனர். பகவத் கிங்கரர்கள் தாம் செய்யும் கைங்கர்யத்துக்கு யாதொரு ப்ரயோஜனத்தையும் அபேக்ஷித்தல் கூடாது. ஏனென்றால், அந்தக் கைங்கர்யம் செய்வதே ஜீவகோடிகளுடைய ஸ்வரூபம் எனும் உண்மையை ஸ்வாமி கோபீஜனங்கட்கு இப்படி உபதேசித்தான்.

ஸ்ரீபாரதத்தில் இக்கதை இல்லாமை.

மஹாபாரதத்தில் ஸபாபர்வத்தில் பீஷ்மர் யுதிஷ்டிரர்க்கு ஸ்ரீ க்ருஷ்ணனுடைய திவ்யசரித்ரத்தை விஸ்தரேண சொன்னார். புராணோக்தமான ஸர்வவிஷயங்களும் பீஷ்மரால் உரைக்கப்பட்டன. ஆனாலும் கோபிகள் வ்ருத்தாந்தம் அவரால் ஸ்மரிக்கப்படவில்லை. திருவாய்ப்பாடி ஜநங்களிடம் பகவான் அநுஷ்டித்த ஸௌசீல்யாதிகளையும், ஸர்வலோகநாதன் தன்னிடம் ரூபங்கொண்டு விளையாட, நிலமங்கையும், ஸாயங்

காலம், வநாந்தம், வஸந்தமாஸம், நறுமணம் வீசும் மலர்வர்க்கம், துளிர்கொண்ட தருக்கள், மந்தமாருதம், வெண்ணிலா, மணற்குன்றுகள், யமுனையின் நிர்மலமான தோயம் முதலியுவற்றால், யதாசக்தி பகவானைப் பூஜித்தனள் என்பதையும், பகவான் சித் அசித்பதார்த்தங்கள் அனைத்தும் மெய்மறந்து தன்னை நாடும்படியாக வேணுகாநம் செய்தான் என்பதையும் பீஷ்மர் சொன்னாராயினும், ச்ருங்கார விஷயமாக ஈஷத்தும் மொழிந்தாரில்லை. அந்தப்ரகரணத்திலேயே, ஸ்வாமியினிடம் குற்றம் காணவென்றே பிறந்த சிசுபாலனும், ஸ்வாமி நிந்தையைப் பரக்கச்செப்பினானும், தாய்முலை யுண்ணுங்கால் அவன் பூதநாசரீரநாசம் செய்ததை ஸ்த்ரீஹத்தியாக வர்ணித்தானாகிலும், பகவான் கோபீஜநங்களுடன் விளையாடியதை அவன் நினைத்தானில்லை. ஆதலால் ஹரிவம்சம், ஸ்ரீ விஷ்ணுபுராணம், ஸ்ரீ பாகவதம் முதலானவற்றுள், கோபிகள் வ்ருத்தாந்தகதநம், வக்தாக்களுக்குப் பகவானுடைய ஸௌசீல்ய ஸௌலப்யாதி வர்ணநத்தில் உண்டான ஆஹ்லாதத்தை ஹேதுவாக வுடையதோ, அல்லது பகவத் பக்தர்க்குள்ளே புமாங்களுள்பட ஸர்வஜநங்களுக்கும், பகவத் பக்திக்குப் பரமாவதியானது லோகாநுபவத்தில் ச்ருங்கார வ்ருத்தியாகப் பரிணமிக்கின்றபடியால், தாத்ருச ப்ரேமையை கோபஸ்த்ரீ வ்ருத்தாந்த வர்ணநத்தால், தாமும், புராணங்கள் கேட்போரும் அநுபவிக்க வேண்டும் எனும் இச்சையை மூலமாக வுடையதோ, யாம் அறியோம்.

மேற்சொன்ன பாரத ப்ரகரணத்தில், பகவான், சிசுபாலன் பஹு ஸ்த்ரீகள் விஷயமாகச் செய்த அதிக்ரமங்களை விவரித்திருக்கின்றார். 'யத்யதாசரதி ச்ரேஷ்ட: தத்ததேவேதரோ ஜந: । ஸ யத் ப்ரமாணம் குருதே லோகஸ்ததநுவர்த்ததே' ॥ என்று லோகஸங்க்ரஹத்தைப் பஹுமாநித்த பகவான், ஸ்வயம் லோகஸங்க்ரஹத்தைச் செய்யாதொழிவனோ? புராணவக்தாக்கள், கோபவதூக்கள் பகவானுடன் விளையாடுங்கால், அவ்வவர் க்ருஹங்களிலும் இருந்தாரென்றும், ஒவ்வொரு பெண்ணினிடமும் ஸ்ரீ க்ருஷ்ணன் தனித்தனியாக விளையாடினானென்றும் சொல்வதால், ஸ்த்ரீகள் தோறும் ப்ரத்யேக சரீரம்கொண்ட சரண்யன், அவர்களில் ஒவ்வொருவர்க்கும் இரண்டு சரீரங்கள் அளித்து, ஒரு சரீரஸமூ

447

ஹத்தில் தான் அந்த:ப்ரவேஶம் செய்து அவர்கள் இல்லங்களில் அவர்கள் செய்யவேண்டிய வ்யாபாரங்களை லோபமற அநுஷ்டித்து விட்டு, மற்ற சரீரங்களுடன்கூடிய அவருடைய ஆத்மாக்களுக்கு 'ஊத்ஸங்ஹயநு ரகிவதிஂ ரஜயாஂவகாரர' என்றபடி, முன்னமே அவர்க்குத் தன்னிடம் உண்டான காமத்தை வ்ருத்திசெய்தான் என்று முடிகின்றது. பின்னல் அவர் விஷயத்தில் தான் உத்தே சித்த விப்ரலம்பத்தில், அது ஸ்திரமாய் நிற்கவேண்டுமென்று உத்தேசித்தனன் போலும். அவனுடைய அவதாரசரீரம் ஸப்த ஹாயந பரிபாகத்துடன் கூடினதாகிலும், கோபவதூக்கள் நிமித் தம் கிஶோரபாவத்தை அநுகரித்தனன் என்பார்கள். பொது வாகப் புராணங்கள் அந்தப் பெண்களுடன் ரமித்தான் என்று உரைக்கின்றன. ஸாக்ஷாத் ஸம்யோகத்தைக் கண்டோக்தியாகச் சொல்லவில்லை. இந்த லீலைகளெல்லாம் அதிமாநுஷசேஷ்டிதங் கள்: ஐஶ்வர்ய ப்ரதர்சநங்கள். இவற்றை இவ்வண்ணமே அங்கீ கரிக்க வேண்டும். பகவான் ஸர்வேஶ்வரன் என்பதை நம்பா மல், ஐஶ்வர்யமின்றி கடிக்காத விஷயங்களைப் பகவந்நிந்தார்த்தம் ஸ்மரிப்பவர் அபராத ஸஹஸ்ரபாஜிகள் ஆவார்.

கோபீஜநங்கட்குப் பகவான் தன் பதம் அளித்தது.

கோபிகள் சித்தத்தில் காமத்துடன் உதித்த ப்ரேமையைக் காமத்துடனே பகவான் வ்ருத்தி செய்தனன். அது அவர்கள் ஸ்வரூபத்தில் ப்ர திஷ்டிதமானவுடன், கம்ஸவத வ்யாஜத்தைக் கொண்டு பதினோராவதுவயதில் நந்தவ்ரஜத்தை விட்டுவிட்டு மதுரைக்குச் சென்றனன். பின்னல் அந்தப் பெண் மணிகளுக்குத் தத்வார்த்தத்தை விளக்கும் பொருட்டுத் தனது ப்ரியஶிஷ்யனை உத்தவரை அவரிடம் அனுப்பினன். அவரது காமத்தைக் கொன்று ப்ரேமையைப் பரபக்தியாகப் பரிணமிக்கச் செய்து அவர்க்குச் சரீராவஸாநே தனது பதமளித்தனன்.

அந்தப் பெண்கட்குக் குருவாகச்சென்ற உத்தவர் என்ன சொன்னர்:—

'ஏதாஃ பரஂ தநுப்ருதோ புவி கோபவத்வஃ
கோவிந்த ஏவ நிகிலாத்மநி ரூடபாவாஃ ।
வாஞ்சந்தி யத்பவபியோ முநயோ வயஂச
கிஂ ப்ரஹ்மஜந்மபிஃ அநந்தகதாரஸஸ்ய ॥

𑌕𑍍𑌵𑍇𑌮𑌾𑌃 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑍋 𑌵𑌨𑌚𑌰𑌾𑌃 𑌵𑍍𑌯𑌭𑌿𑌚𑌾𑌰𑌦𑍁𑌷𑍍𑌟𑌾𑌃
𑌕𑍃𑌷𑍍𑌣𑍇 𑌕𑍍𑌵 𑌚𑍈𑌷 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 𑌰𑍂𑌢𑌭𑌾𑌵𑌃 ।

* * * * * *.

𑌵𑌨𑍍𑌦𑍇 𑌨𑌨𑍍𑌦𑌵𑍍𑌰𑌜𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌣𑌾𑌂 𑌪𑌾𑌦𑌰𑍇𑌣𑍁𑌮𑌭𑍀𑌕𑍍𑌷𑍍𑌣𑌶𑌃 ।
𑌯𑌾𑌸𑌾𑌂 𑌹𑌰𑌿𑌕𑌥𑍋𑌦𑍍𑌗𑍀𑌤𑌂 𑌪𑍁𑌨𑌾𑌤𑌿 𑌭𑍁𑌵𑌨𑌤𑍍𑌰𑌯𑌂 ' ॥

"ஸர்வாந்தராத்மாவான கோவிந்தனிடம் இவ்வண்ணம் வேரூன்றி நிலைத்த ப்ரேமைகொண்ட இந்தக் கோபவதூக்களன்றோ மிகவும் ஸாபல்யமடைந்த ஜந்மத்துடன் கூடினவர்கள்! முமுக்ஷுக்களும், முநிகளும், எங்களைப் போன்றவர்களும் எந்த ப்ரேமையை ப்ரார்த்திக்கின்றோமோ, (அதை இவர்கள் அடைந்தார்கள்.) அநந்தனுடைய கதையில் ரஸாநுபவம் பண்ணுகின்றவனுக்கு ப்ராஹ்மணாதி உத்க்ருஷ்ட ஜந்மங்களால் ஆகவேண்டியதென்ன? காட்டில் வஸிப்பவரும், துர்வ்ருத்தத்தில் சீலருமான இந்த ஸ்த்ரீகள் எங்கே? பரமாத்மாவான க்ருஷ்ணனிடம் இவர்க்குண்டான இந்த தீர்க்கப்ரேமை எங்கே? * * * எவருடைய ஹரிக்தையின் கானமானது மூன்று லோகத்தையும் புநிதமாக்கு கின்றதோ, அந்த நந்தவ்ரஜஸ்த்ரீகளுடைய பாதத்தூளை அடிக்கடி நமஸ்கரிக்கின்றேன்."

அவர் ப்ரேமையை ஆழ்வார் அநுகரணம் செய்தது.

என்றிப்படியன்றோ அவர் ஸ்வாபிப்ராயத்தை வெளியிட்டனர். பாபசங்கையை முற்றும் விலக்கிப் பிறந்திருந்த நமது ஸம்ப்ரதாய குலபதியான சடகோபனும், தமது பக்தியை ஶ்ருங்காரரூபமாய் அநுபவித்தாரன்றோ? வ்ரஜஸுந்தரிகள் ஸ்ரீ க்ருஷ்ணனை த்யாநித்து த்யாநித்து, ஸஹமேவாஹம் என்றெண்ணி, அவனுடைய சேஷ்டைகளைத் தாம் அநுகரித்தவண்ணம் ஆழ்வாரும், "இனவேமலை யேந்தினேன் யானேயென்னும், இனவேறுகள் செற்றேனும் யானேயென்னும், இனவான்கன்று மேய்த்தேனும் யானேயென்னும், இனவானிரை காத்தேனும் யானேயென்னும்", என்று ஸ்ரீ க்ருஷ்ணனெனத் தன்னையும் எண்ணி நடித்தனர். தன்னை நாயகியாக நினைத்து, அவன் விரஹத்தைத் தாளாது, "சாயக்குருந்தமொசித்த தமியற்கு, மாயச்சகடமுதைத்த மணாளற்குப், பேயைப் பிணம்படப் பாலுண் பிரானுக்கென், வாசக்குழலி யிழந்தது மாண்பே" என்றும், "கங்

449

குலும் பகலும் கண்டுயிலறியாள் கண்ணநீர் கைகளாலிறைக்கும், சங்குசக்கரங்களென்று கைகூப்பும் தாமரைக்கண்ணென்றே தளரும்,” என்றும், இன்னும் பலவிதமாகவும் முறையிட்டனர்.

திருமங்கைமன்னனும் “ கல்லெடுத்துக் கன்மாரி காத்தாயென்றும், காமருபூங் கச்சியூரகத்தாயென்றும், * * * மல்லடர்த்து மல்லரை யன்றட்டாயென்றும் * * சொல்லெடுத்துத் தன்கிளியைச் சொல்லேயென்றும், துணைமுலைமேல் துளிசோரச் சோர்கின்றாளே,” என்று இவ்விதமாகப் பலபாசுரங்கள் பாடினார். சூடிக்கொடுத்தாள் வ்ரஜாங்கனைகளுடைய அநுபவத்தைத் தானும் அடைந்தாளென்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

பதியொருவற்கே தாம் ஶேஷபூதரென்றும், பதிவிஷயமாகப் பாரதந்த்ரியமே தமக்குப் பொருந்திய ஸ்வபாவமென்றும், பதியினிடம் ப்ரேமையே தமக்கு உயிரென்றும், முன்காலத்தில் நமது ஸ்த்ரீகள் நினைத்திருந்தார்கள். ஸீதை, ஸாவித்ரி, தமயந்தி முதலானவர்கள் இந்த அபிப்ராயத்தை ஆதரித்தனர். இந்த ரூபமான ஸம்பந்தத்தைப் பக்தர்கள் பகவானிடம் அபேக்ஷித்தனர். இப்படிப் பகவதநுபவம் செய்தவர்க்குள், கோபகந்நிகைகளுக்கு ஸமமானவர் இருந்ததில்லை. அவ்வநுபவத்தின் லேசத்தை அடைய ஸ்ரீ க்ருஷ்ணசைதந்யரெனும் வங்கதேசத்து ஆசார்யன் மிகவும் வேண்டினர்.

இப்படி வ்ரஜஸ்த்ரீகளுக்குப் பகவான் அந்யத்ர அத்ருஷ்டமாகத் தன்னிடம் ப்ரேமையுண்டாகும்படி அநுக்ரஹித்து, அதை ஸ்திரப்படுத்தி, அதில் நிவர்த்திக்கவேண்டிய அம்சங்களை நிவர்த்திப்பித்து, அதைப் பரபக்தியாகப் பரிணமிக்கச் செய்ததும் ஹேமந்தருதுவின் மாஸங்களில் என்று தெரிகின்றது. பகவத்கைங்கர்யரூபமான நிஷ்காம கர்மங்களும், அவன் ஸம்பந்தமான ஜ்ஞாநமும், ப்ராணிகளுக்கு ஸ்வரூப ஸம்பாதநத்துக்கு அநுகூலமாகும்படியை ஈச்வரன் தன்னுடைய முக்யாவதாரங்களில் மேல் விவரித்தபடி நமக்குக் காட்டியருளினான்.

தை மாஸம் ஸ்ரீ வீரராகவன் அவதாரம்.

இந்தத் தைமாஸத்தில் தான் இவ்விரண்டு அவதாரங்களும் [illegible] எனும்படி ஸ்ரீவாஸுதேவன் எவ்வுள்மாநகரத்தில் ஆவிர்ப்பவித்தானென்று அந்தத் திவ்யதேசபுராணம்

சொல்லும். தை அமாவாஸ்யையன்று, ராவணஸம்ஹாரம் செய்தவுடன் திருவெவ்வுளூரில் தன்னைத் தர்ஶிக்கத் தவம்புரிந்த ஶாலிஹோத்ரரெனும் ருஷிக்கு ஸ்வாமி ஸேவை ஸாதித்தனன். என்பது புராணகதை. ருஷியின் பூஜையைக் கைக்கொண்டு, அவரை வ்யாஜீகரித்து லோகக்ஷேமத்தின் பொருட்டுப் பகவான் தனக்கு ஶயநஸ்தாநத்தை "எவ்வுள்" எனக்கேட்டருளியபடி, ஊருக்கும் எவ்வுளூர் என நாமம் கிடைத்தது. இப்படி அவதரித்த அர்ச்சா ரூபியான எம்பெருமானைக் குறித்துத் திருமங்கைமன்னன்,

'காசையாடை மூடியோடிக் காதல்செய்தானவனூர்
நாசமாக நம்பவல்ல நம்பி நம்பெருமான்
வேயினன்ன தோண்மடவார் வெண்ணெயுண்டானிவனென்
றேசநின்ற வெம்பெருமா னெவ்வுட்கிடந்தானே'.

என்று பாடியருளினர். ராவணன் காஷாயம் தரித்துத் தன் நிஜரூபத்தை மறைத்துப் பஞ்சவடிக்கு த்வரிதமாகச் சென்று, பகவானுடைய திவ்யமஹிஷியினிடம் காமங்கொண்டு, அவளைக் கவர்ந்து தனது ஊராகிய லங்கைக்குப் போய்ச் சேர்ந்தான். பரஸ்த்ரீயினிடம் ஆசைகொள்ளல் கொடியபாபம். ராவணனோ, ஸாக்ஷாத் ஸர்வலோகநாதனுடைய பத்நீயினிடம் காதல்செய்தான். அதுவும் ஸந்யாஸிவேஷம் பூண்டு செய்தனன். இந்த அபராதத்துக்குத் துல்யமாக மற்றொன்றை ஸ்மரிக்கவும் ஒண்ணாது. கம்பன் பாடியபடி, சீர்மகளைத் திருமகளைத் தேவர்க்கும் தம்மோயைத் தெய்வக் கற்பின் பேர்மகளைத் தழுவ இச்சித்து உயிர் கொடுத்தும் பழி கொண்டனன் இலங்கையர்கோன். இன்னும்,

'ராகவத்வேऽபவத் ஸீதா ருக்மிணீ க்ருஷ்ணஜந்மநி
அந்யேஷு சாவதாரேஷு விஷ்ணோரேஷாऽநபாயிநீ'।

எனும்வண்ணம், ஸீதையோ லக்ஷ்மீ; பகவானுக்கே உரியவள் என்பதைத் தசக்ரீவன் கண்டானில்லை. கம்பன் பாடியபடி, 'உறைந்த பாற்கடல் சேக்கை உடன் ஒரீஇ, அறம்திறம்புமென்றய்யன் அயோத்தியில், பிறந்தபின்பும் பிரிவிலள் ஆயினள்' ஸீதை. அவளைப் பெருமானைவிட்டுப் பிரிக்க யத்தநித்தான் ராவணன்.

'அநந்யா ராகவேணாஹம் பாஸ்கரேண ப்ரபா யதா,' என்றும்
'ஶோஹி யத்3ப்ராத்3நம்வதீம் ஶசீவ ஶசீபதே:।
க்வசி த்ரிஷு லோகேஷு ப்ராயஶ்சேந்த ஸாவிகா:'।

என்றும், பிராட்டியே தன்ஸ்வரூபத்தை ராவணனுக்குச் சொன்னாள். அவன் அதைக் கேட்டானில்லை. ஹநுமானுக்கோ, 'ராவணோ ஹந்தி வைதேஹீம் தம்வை பஶ்யதி லக்ஷ்மணா', என்று தோன்றியது. அவர் சித்தம் சுத்தமாக நின்றது. ராவணனுடைய சித்தம் காமத்தால் கெட்டது. ஆதலால், இறையும் அகிலகில்லே னென்று அவன் திருமார்பில் உறையும் அலர்மேல் மங்கைமேல் அவன் காமுற்றனன். பகவானிடம் அஸஹ்யாபராதம் பண்ணினன்.

'விதித: ஸ ஹி தர்மஜ்ஞ: ஶரணாகதவத்ஸல:, என்றும்
ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே ।
அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம ॥ என்றும்
மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந । என்றும்
ஆநயைநம் ஹரிஶ்ரேஷ்ட தத்தமஸ்யாபயம் மயா ।
விபீஷணோ வா ஸுக்ரீவ யதி வா ராவணஸ்ஸ்வயம் ॥ என்றும்

பிராட்டி வசநமும் பகவத்வசநமும் இருக்கையிலும், ராவணன் பகவான் திருவடிகளில் வணங்கினனில்லை. பகவானுடைய அத்யந்த நிக்ரஹத்துக்குப் பாத்ரானாய்விட்டான். 'ப்ரஹ்மா ஸ்வயம்பூஶ்சதுராநநோ வா, ருத்ரஸ்த்ரிநேத்ரஸ்த்ரிபுராந்தகோ வா । இந்த்ரோ மஹேந்த்ரஸ்ஸுரநாயகோ வா, த்ராதும் ந ஶக்தா யுதி ராமவத்யம்' ॥ என்று ஹநுமத்வசநத்தைக் கேட்டுத் தான் பகவந்நிக்ரஹத்தை ஸம்பாதித்துக்கொண்டபிறகு அதன் பலமாக வரப்போகின்ற தன்னுடை ஸமூலநாசத்தினின்று தன்னை ரக்ஷிப்பவர் யாருமில்லை யென்பதை நினைத்தானில்லை. ஸீதா பிராட்டியும்,

'ஶ்ரியம் குபேரஸ்ய ம்ருதோபயாய வா
ஸஹாம் ம்ருதோ வா வருணஸ்ய ராஜ்ஞ: ।
அஸம்ஶயம் தாஶரதேர் ந மோக்ஷ்யஸே
மஹாக்ரஹ: காலஹதோ ம்ருதோஸி வ' ॥ எனும் ஶ்லோகத்தால், அதே அர்த்தத்தை ராவணனுக்குத் தெரிவித்தாள். ஒன்றும் பயன்படவில்லை. ராவணனை, அவன் பந்துவர்க்கம், ஸேனை, நகரம்

L 452

உள்பட அவன் அபராதநிமித்தம் பகவான் நாசம்செய்தனன். 'பீஷாஸ்மாத் வாத: பவதே, பீஷோதேதி ஸூர்ய:, பீஷாஸ்மாதக்நிஶ்சேந்த்ரஶ்ச, ம்ருத்யுர்தாவதி பஞ்சம:', எனும் ஶ்ருதிவாக்யமும், அதை அநுஸரித்த 'ஶ்ருத்வா ரணே விபவகஷ்டீக்ஷுப நாயகாநாமபய: ஸக்ருத்த்வயீதி வபுஷே யதவாபயந்தோ விபீஷண:' । எனும் தேசிகன் ச்லோகமும் ராவணனுக்குப் பயன்படவில்லை. அவனை அழித்ததில் பகவானுடைய பரத்வம் ப்ரகாசித்தது. கோபீஜநங்களிடம் அவனது ஸௌலப்யம் விளங்கியது. 'பத்துடையடியவர்க் கெளியவன்' என்று ஆழ்வாரும் ஸாதித்தனரன்றே? அப்படியே தேசிகனும், 'நிஷாதாநாம் நேதா கபிகுலபதி: காபி ஶபரீ குசேல: குப்ஜா ஸா வ்ரஜயுவதயோ மால்யக்ருதிதி । அமீஷாம் நிம்நத்வம் வ்ருஷகிரிபதேருந்நதிமபி ப்ரபூணாம் ச ப்ராப்தா: ப்ர ஸமீகர்தும் ஸமயவஸி' ॥ என்று, குஹன், ஸுக்ரீவன், ஶபரீ, குசேலர், சந்தநம் அளித்தகுப்ஜை, கோபகந்நிகைகள், மாலாகாரன், இப்படிப்பட்ட அதிநிக்ருஷ்ட ஜநங்களுடன் பகவான் ஸமத்வத்தை வஹித்து, தான் பக்தர்க்கு ஸுலபன் என்று காட்டி யருளினன். ஆதலால் பக்தாக்ரேஸரர்களான வேயினன்ன தோண்மடவார் சேகரித்த வெண்ணெயை அவருடைய ஹ்ருதயத்துடன் தனக்கென்று அவன் திருவுள்ளம்பற்ற, அவனுடைய ஸௌலப்யத்தை அறிந்த அப்பெண்கள் ஏசவும், அதையும் எதிர்நின்று ஒருபூஜையென அங்கீகரித்தனன். ஆகையால், பரத்வ ஸௌலப்யம் ஸ்ரீ வீரராகவனிடம் மிகவும் ப்ரகாசிப்பதை ஆழ்வார் ஸ்வயம் ஸாக்ஷாத்காரம்செய்து நமக்கும் காட்டியருளினர்.

அந்தப் பகவான் அவதரித்ததும், அவதார ப்ரயுக்தமான மஹோத்ஸவத்தைக் கண்டருளுவதும், இந்தத் தைமாஸத்திலன்றோ? அந்தத் திவ்யதேசத்தில் அதிகாரம் செலுத்திய யாரோ ஒரு சிற்றரசனல் பகவானுடைய தீர்த்த திநம், அவன் நக்ஷத்ரமான ஶ்ரவணத்தினின்று பூரட்டாதியாக மாற்றப்பட்டிருக்க வேண்டும்.

453

𑌶𑍍𑌰𑍀𑌃.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

ஸ்ரீ ஸ்தோத்ர ரத்நம்.

𑌵𑌿𑌰𑌾𑌜𑌮𑌾𑌨𑍋𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑌪𑍀𑌤𑌵𑌾𑌸𑌸𑌂
𑌸𑍍𑌮𑌿𑌤𑌾𑌤𑌸𑍀𑌸𑍂𑌨𑌸𑌮𑌾𑌮𑌲𑌚𑍍𑌛𑌵𑌿𑌂 ।
𑌨𑌿𑌮𑌗𑍍𑌨𑌨𑌾𑌭𑌿𑌂 𑌤𑌨𑍁𑌮𑌧𑍍𑌯𑌮𑍁𑌨𑍍𑌨𑌤𑌂
𑌵𑌿𑌶𑌾𑌲𑌵𑌕𑍍𑌷𑌃𑌸𑍍𑌥𑌲𑌶𑍋𑌭𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 ॥ 32.

பகவானுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தை த்யாநம் செய்யத் தொடங்கி முதலில் அவனுடைய பாதாரவிந்தத்தின் ஸாக்ஷாத்காரத்திலும் ஸம்ஶ்லேஷத்திலும் தமக்குள்ள த்வரையை ஒருவாறு வெளியிட்டு, ஸ்ரீ ஆளவந்தார், தம்முடைய ஸர்வ வித கைங்கர்யத்திற்கும் உத்தேஶ்யமான ஸ்ரீ பகவானை, திவ்யாவயவங்களடங்கிய திவ்யமங்கள விக்ரஹம் திவ்யாயுதங்கள் திவ்ய மஹிஷீ திவ்யாநுசரர்கள் இவர்களுடன் கூடினவனாக, இது முதல் 14 - ஶ்லோகங்களினால் விஶதமாக அநுஸந்தாநம் செய்கிறார். அவைகளுள் முதல் ஶ்லோகமான இந்த ஶ்லோகத்தினால் அவனுடைய திவ்ய ஸ்வரூபத்தின் ஸமுதாய ஶோபை அநுபவிக்கப்படுகின்றது.

இந்தப் பதினாறு ஶ்லோகங்களும் ஒரே அந்வயம். இதிலிருந்து பதினைந்தாவதாகிற 46 - வது ஶ்லோகத்திலிருக்கும் '𑌭𑌵𑌨𑍍𑌤𑌂' என்னும் பதத்துடன், இவைகளிலுள்ள இரண்டாம் வேற்றுமைப் பதங்களெல்லாம் அந்வயிக்கின்றன. '𑌭𑌵𑌨𑍍𑌤𑌮𑍇𑌵𑌾𑌨𑍁𑌚𑌰𑌨𑍍 𑌕𑌦𑌾 𑌪𑍍𑌰𑌹𑌰𑍍𑌷𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 -' (இப்படிப்பட்ட உனக்கே ஸார்வகாலிகமாகக் கைங்கர்யம் செய்துகொண்டு எப்பொழுது நான் அபரிச்சிந்நமான ஆநந்தத்தை அநுபவிக்கப்போகின்றேன்?) என்பது வாக்யத்தின் தொடர்.

"𑌸𑌤𑍍𑌯𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌨𑌨𑍍𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮"

(ப்ரஹ்ம மென்பது ஸத்ய ஸ்வரூபம் ஜ்ஞாந ஸ்வரூபம் அநந்த ஸ்வரூபம்) என்றும்,

"𑌯𑌤𑍋 𑌵𑌾 𑌇𑌮𑌾𑌨𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌜𑌾𑌯𑌨𑍍𑌤𑍇 - 𑌯𑍇𑌨 𑌜𑌾𑌤𑌾𑌨𑌿 𑌜𑍀𑌵𑌨𑍍𑌤𑌿 - 𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑌭𑌿𑌸𑌂𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿 - 𑌤𑌦𑍍𑌵𑌿𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌸𑍍𑌵 - 𑌤𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮"

(ஸ்தாவர ஜங்கமங்க ளடங்கிய இந்த ப்ரபஞ்சம் முழுவதற்கும் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரம் ஸம்ஸார விமோசநம் ஆகிய இவை எதனிடத்திலிருந்து உண்டாகின்றனவோ, அதுதான் ப்ரஹ்மம்) என்றும் வேதாந்தங்களில் பகவத் ஸ்வரூபம் நாமரூபமற்றதாகப் படிக்கப்பட்டிருந்த போதிலும், பக்தர்களுக்குப் புருஷாகாரத்துடன் கூடினவனாகவே அவன் ப்ரகாஶிக்கிறானதனால், இவ்விடத்தில், ஸ்ரீ ஆளவந்தார் அவனைத் திவ்யமங்கள விக்ரஹ யுக்தனாகவே அநுஸந்திக்கிறார்.

"𑌨 𑌤𑍇 𑌰𑍂𑌪𑌂 𑌨 𑌚𑌾𑌕𑌾𑌰𑍋 𑌨𑌾𑌯𑍁𑌧𑌾𑌨𑌿 𑌨 𑌚𑌾𑌸𑍍𑌪𑌦𑌮𑍍 ।
𑌤𑌥𑌾𑌽𑌪𑌿 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌕𑌾𑌰𑍋 𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌤𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌸𑍇 ॥"

என்று சொல்லப்பட்டிருக்கிறதன்றோ?

"𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌵𑌰𑍍𑌣𑌂 𑌤𑌮𑌸𑌃 𑌪𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍"

"𑌤𑌸𑍍𑌯 𑌮𑌾𑌹𑌾𑌰𑌜𑌨𑌂 𑌵𑌾𑌸𑌃"

"𑌤𑌸𑍍𑌯 𑌯𑌥𑌾 𑌕𑌪𑍍𑌯𑌾𑌸𑌂 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌮𑍇𑌵𑌮𑌕𑍍𑌷𑌿𑌣𑍀"

"𑌹𑍍𑌰𑍀𑌶𑍍𑌚 𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌶𑍍𑌚 𑌪𑌤𑍍𑌨𑍍𑌯𑍌"

இவை முதலிய ஶ்ருதி வாக்யங்களும் இதற்கு ப்ரமாணம்.

𑌵𑌿𑌰𑌾𑌜𑌮𑌾𑌨𑍋𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑌪𑍀𑌤𑌵𑌾𑌸𑌸𑌂 - விஶேஷித்த ஒரு ஶோபையுடன் கூடியும் ஜ்வலித்துக்கொண்டும் இருப்பதான் பீதாம்பரத்தை யுடைய. பீதாம்பரத்திற்கு இயற்கையாகவே ஒருவித ஶோபையும் ப்ரகாஶமும் இருந்த போதிலும், இவ்விடத்தில் ஶ்யாம வர்ணமுள்ள விக்ரஹத்துடன் ஸம்பந்தித்திருப்பதனால்

455

அநிர்வசநீயமான ஒரு பரபாக ஶோபை அதனிடத்துத் தோன்று கிறது என்பது தாத்பர்யம்.

ஷூிதாதஸீஷுநஸஊஉயுஹுவிஂ - மலர்ந்திருக்கும் அதஸீ புஷ்பத்திற்குத் துல்யமான உஜ்வல காந்தியை யுடைய. நீல மேகம் போல ஶ்யாமளமாக இருப்பதனால் இந்த விக்ரஹம் அதஸீ புஷ்பத்திற்கு (காயாம்பூவிற்கு) ஒப்பிடப்பட்டிருக்கின்றது.

ஸ்ரீ ஆழ்வான், பகவானுடைய திவ்யமங்கள விக்ரஹத்தின் லாவண்யத்தை அநுஸந்திக்கும் பொழுது, அதன் அந்யாத்ருஶ மான ஶோபையைப் பார்த்து மயங்கி, 'இது என்ன ஶோபை' கேவலம் ஸ்வர்ணம் போல் பீதமென்றாவது, மரகதம் போல ஹரித மென்றாவது, அஞ்ஜநம் போல நீலமென்றாவது சொல் வதற்குக் கூடவில்லையே! ஒருகால் ஸ்வர்ணம் மரதகம் அஞ்ஜ நம் என்னும் மூன்றையும் நீராக்கி, அவைகளைப் பாத்ரங்களில் வைத் துக் கடையுங்காலத்தில், தயிர் கடையும் பொழுது அதனிடத்துத் தோன்றும் வெண்ணெய் போல இதனிடத்தில் தோன்றும் ஸாராம் ஶங்களை எடுத்துக் கலந்து அதனால் இந்த லாவண்யம் நிர்மிதமாகி இருக்குமோ?' என்று உல்லேகித்திருக்கிறார்.

"கநககாரதகாஂஜநஜ்வாணாஂ
உயநஸ-ஷிதவாரஜொநோத்ஞம் ।
ஜயதி கிஉவி ரூவஉஸ்ய தெஜொ
வநமிரி நஂஷ நஸ-ஷரொரபவாஹொ: ॥"

அதாவது - அந்தத் தேஜஸ், ஸர்வோத்க்ருஷ்டமாக இருக்கின்றது என்று தாத்பர்யம்.

நிஉநநாஹிஂ - உட்குழிந்திருக்கும் நாபியை யுடைய. 'நான்கு பக்கங்களிலும் ப்ரவஹித்து ஓடும் பகவானுடைய ஸௌந் தர்யமாகிற அம்ருத ஸாரத்தின் சுழலோ இது?' என்று ஶங்கிக் கும்படி இருக்கின்றது என்பது குறிப்பு.

தநஉயஂ - க்ருஶமான உதரத்தை யுடைய. 'ஸமஸ்த லோகங்களுக்கும் இருப்பிடமாக இருக்கும் இந்த உதரம், எவ்

> சகாஸதம் ஜ்யாகிணகர்கஶை: ஸுந்தரை-
> ஶ்சதுர்பிர் ஆஜாநுவிலம்பிபிர் புஜை: ।
> வ்யாயதம்ஶோத்வமுகணாங்கலக்ஷண-
> ஶ்ரியா ஸகாரவம்யவிஶேஷஸம்ஸிபிஃ ॥ 33.

விதமாக இவ்வளவு கார்ஶ்யத்தை அடைந்திருக்கிறது?' என்று ஒருவித ஆஶ்சர்யத்தை இந்தப் பதம் த்யோதிப்பிக்கின்றது.

> "ஹந்த! யஸ்ய நிவஸந்தி ஜந்தவ
> ஸ்ஸாவிதக்ருஶிம தஸ்ய நாயகம் ॥"

ப்ரளயகாலத்திலே ஸகல ஜகத்தும் எம்பெருமானுடைய உதரத்தில் வஸிக்கின்றது என்பது ப்ரமாணப்ரஸித்தம்.

உந்நதம் - உயர்ந்து நிற்கும். உயர்ந்த ஆக்ருதியானது விஶேஷித்த காம்பீர்யத்திற்கு ஓர் அடையாளம்; எல்லாரையும்விட எல்லா விஷயத்திலும் அதிகன் என்பதையும் குறிக்கின்றது.

விஶாலவக்ஷஸ்ஸ்தலஶோபிலக்ஷணம் - விஶாலமான மார்பை ஶோபிக்கச்செய்து கொண்டு நிற்கும் அஸாதாரணசிந்ஹங்களையுடைய. எம்பெருமானுடைய மார்பு, லக்ஷ்மிக்கு வாஸ ஸ்தாநமாயும், கௌஸ்துபத்தினுல் அலங்கரிக்கப்பட்டதாயும், ஸ்ரீ வத்ஸம் வநமாலை இவைகளுடன் ஸம்பந்நமாயும் இருக்கின்றதன்றோ? இவைதாம் இவ்விடத்தில் அஸாதாரண லக்ஷணங்களாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

33. புஜமத்யத்தின் ஶோபையை அநுஸந்தாநம் செய்துவிட்டு, வீரரஸத்தினுலும் ஶ்ருங்காரரஸத்தினுலும் சித்ரிதமாக இருக்கும் புஜங்களுடைய ஶோபையை அநுஸந்தாநம் செய்கிருர்.

ஜ்யாகிணகர்கஶை ராஜாநுவிலம்பிபிஃ வ்யாயதம் ஶோத்வமுகணாங்கலக்ஷணஶ்ரியா ஸகாரவம்யவிஶேஷஸம்ஸிபிஃ ஸுந்தரை ஶ்சதுர்பிர் புஜை ஶ்சகாஸதம் [வில் நாணியின் உரய்தல் காரணமாக ஜநித்திருக்கும் தழும்புகளினுல் கரடுமுரடுகளாயும், முழங்காலளவும் நீண்டவைகளாயும், வீரபத்நீ ஸம்பந்தத்தை ஸூசிப்பிக்கக்கூடிய சிந்ஹங்களை உடையவைகளாயும், தர்ஶ

457

மாத்ரத்தினல், மங்களகரங்களாயுமுள்ள நான்கு புஜங்களால் விளங்கிக்கொண்டிருக்கும்.]

ஜ்யாகிணாஙகைஃ - அவதார தசையில் விரோதிகளை நிரஸிக்கும்பொருட்டுக் கணக்கற்ற யுத்தங்களைப் பகவான் செய்திருப்பது புராண ப்ரஸித்தம். அந்த யுத்தங்களில் நேர்ந்த வில் நாணியின் வடுக்கள், அந்த அவதார தசையில் பகவானுடைய திருக்கைகளை அலங்கரித்திருந்தன. அந்த வடுக்களே பரத்வதசையிலும் திருக்கைகளில் ஶோபிக்கின்றன என்பது, ஸ்ரீ ஆளவந்தாருடைய திருவுள்ளம். பரத்வதசையிலும் அவதாரதசையிலும் எம்பெருமானுடைய திருமேனிக்கு யாதொரு பேதமுமில்லை யென்பது இங்கே விவக்ஷிதம். நிகிலஹேய குணங்களுக்கும் ப்ரத்யநீகனும் ஸகல கல்யாண குணங்களுக்கும் ஏகநிதியாயுமுள்ள பகவானுடைய அவதாரம், இந்த்ரஜாலம் போலப் பொய்யன்று உண்மையே என்றும், அவதரிக்கும்பொழுது எவ்வித ஜ்ஞாந ஸங்கோசமுமில்லாமல் தனது ஐஸ்வர்யத்திற்கு இயற்கையான ஸ்வபாவத்தை விடாமலே அவன் அவதரிக்கிறனென்றும், அவனுடைய அவதார விக்ரஹம் ஸத்வம் ரஜஸ் தமஸ் ஆகிய மூன்று குணங்களினல் ஏற்பட்டிருக்கும் ப்ராக்ருத விக்ரஹமன்றிக்கே அப்ராக்ருதமான ஶுத்த ஸத்வமய மென்றும், அவனுடைய அவதாரத்திற்குப் புண்ய அபுண்ய ரூபங்களான கர்மங்கள் காரணமல்ல தனது ஸங்கல்பமே காரணமென்றும், அவனுடைய அவதாரத்தின் பலங்களும் ஸுக துஃக்க ஸம்பத்தங்களான ஐஹிக போகங்களல்ல ஸாது ஸம்ரக்ஷணம் துஷ்ட நிக்ரஹம் தர்ம ஸம்ஸ்தாபநம் முதலியவைகளே யென்றும், இப்படி ஸ்வரூபத்தினலும் ப்ரகாரத்தினலும் த்ரவ்யத்தினலும் காரணத்தினலும் ப்ரயோஜநத்தினலும் எம்பெருமானுடைய அவதாரம் திவ்யமே என்று ஸ்ரீ பகவத் கீதையில்

"ஜந்ம கர்ம ச மே திவ்யம்"

என்னும் வாக்யத்தினல் ஸ்ரீ பகவானே விளக்கி யிருக்கிறர். ஆகையினல், இவ்விடத்தில், பரத்வ விக்ரஹத்திற்கும் அவதார விக்ர

ஹத்திற்கும் ஒருவித அபேத அநுஸந்தாநத்தை ஸ்ரீ ஆளவந்தார் செய்வது அப்ரமாணமன்று.

ஆஜாநுவிலம்பிபி: - முழங்காலளவும் நீண்டுள்ள.

"ஆயதாஶ்ச ஸுவ்ருத்தாஶ்ச பாஹவ: பரிகோபமா:"

[எம்பெருமானுடைய திருக்கைகள் நீண்டும் ஸுவ்ருத்தங்களாகவும் பரிகங்களுக்குத் துல்யங்களாகவும் இருக்கின்றன] என்கிறபடி நீண்ட கைகளை யுடையவன் என்பது தாத்பர்யம்.

"பீதாம்பரம் கரவிராஜித ஶங்கசக்ர-

ஆஜாநுலம்பிபுஜ மாயதகர்ணபாஶம் ||"

இத்யாதியாகவன்றோ எம்பெருமானுடைய திவ்ய மங்கள விக்ரஹ யோகத்தைப் பக்தர்கள் அநுஸந்தாநம் செய்திருக்கிறார்கள்?

ப்ரியாவதம்ஸோத்பலகர்ணபூஷணஶ்லதாலகாபந்தவிமர்தஶம்ஸிபி: - எம்பெருமானுடைய வீர பத்நீ ஸம்பந்தம் இதனால் சொல்லப்படுகின்றது. பகவானுடைய ப்ரியையாவது - ஸாக்ஷாத் லக்ஷ்மீ; அவள் திருக்காதுகளில் கர்ணவதம்ஸமாக நீலோத்பல புஷ்பத்தைத் தரித்துக்கொண்டிருக்கிறாள்; அதுவே ஒரு கர்ண பூஷணமாகின்றது; விலாஸ காலங்களில் அதில் ஶ்லதங்களாய் (அவிழ்ந்து தொங்குபவைகளாய்) நிற்கின்றன அவளது அளகங்கள்; இயற்கையாகவாஸனையை யுடையவைகளாயும் இந்த நீலோத்பல புஷ்ப ஸம்பந்தத்தினால் ஒருவித அஸாதாரண வாஸனையை அடைந்தவைகளாயுமுள்ள இந்த அளகங்கள், போக ஸமயங்களில் எம்பெருமானுடைய திருக்கைகளில் ஸம்பந்தப்பட்டிருக்கின்றன என்பது தாத்பர்யம். உபதாநமாக அந்வயித்ததனாலோ அல்லது ஆலிங்கநாதிகளில் ஸம்பந்தப்பட்டதனாலோ அளகங்களுடைய விமர்த்தம் கைகளுக்கு உண்டாகக்கூடும். அப்படிப்பட்ட அவஸரமேதான் இங்கே அநுஸந்தாநம் செய்யப்படுகின்றது.

மங்கலை: - மங்கள கரங்களான. அதாவது - 'ஆஶ்ரிதர்களுக்கு ஸதா மங்களங்களைக் கொடுக்கக்கூடிய' என்பது தாத்பர்யம். அல்லது, ஔதார்யம் வீர்யம் ஸௌந்தர்யம் முதலிய குணங்கள் பொருந்தியவை என்று சொல்லவும் கூடும்.

459

𑌉𑌦𑌗𑍍𑌰𑌪𑍀𑌨𑌾𑌂𑌸𑌵𑌿𑌲𑌮𑍍𑌬𑌿𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑌾-
𑌲𑌕𑌾𑌵𑌲𑍀𑌬𑌨𑍍𑌧𑍁𑌰𑌕𑌮𑍍𑌬𑍁𑌕𑌨𑍍𑌧𑌰𑌮𑍍 ।
𑌮𑍁𑌖𑌶𑍍𑌰𑌿𑌯𑌾 𑌨𑍍𑌯𑌕𑍍𑌕𑍃𑌤𑌪𑍂𑌰𑍍𑌣𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑌾-
𑌮𑍃𑌤𑌾𑌂𑌶𑍁𑌬𑌿𑌮𑍍𑌬𑌾𑌮𑍍𑌬𑍁𑌰𑍁𑌹𑍋𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑌶𑍍𑌰𑌿𑌯𑌮𑍍 ॥ 34.

𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑌿𑌰𑍍 𑌭𑍁𑌜𑍈 𑌶𑍍𑌚𑌕𑌾𑌸𑌤𑌮𑍍 - நாலு கைகளினல் விளங்கிக்கொண்டிருக்கும். பரரூபத்திலும் எம்பெருமானுக்கு நாலு கைகளே என்பது ப்ரமாண ஸித்தம்.

"𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑌃 𑌶𑍍𑌯𑌾𑌮𑌲𑌾𑌂𑌗𑌃 𑌶𑍍𑌰𑍀𑌭𑍂𑌮𑌿𑌭𑍍𑌯𑌾 𑌸𑌹 𑌨𑍀𑌲𑌯𑌾"
[நான்கு கைகளுடனும் நீலமேக ஶ்யாமளங்களான அங்கங்களுடனும் ஸ்ரீ பூமி நீளா ஆகிய தேவிகளுடனும்] என்று விஷ்வக்ஸேந ஸம்ஹிதையில் சொல்லப்பட்டிருக்கின்றது.

"𑌮𑍁𑌖𑌂 𑌕𑌿𑌮𑌸𑍍𑌯 𑌕𑍌 𑌬𑌾𑌹𑍂"
என்னும் புருஷஸூக்த வாக்யம் முதலியவைகளில் சொல்லப்படும் த்விபுஜத்வம், ப்ரகாணம் முதலியவைகளை அவலம்பித்து 'வேறு விஷயத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றது' என்று ஆசார்யர்களால் நிர்வாஹம் செய்யப்பட்டிருக்கின்றது.

34. பீதாம்பரம் முதலாகத் திருமார்பு திருக்கைகள் இவைகளை அநுபவித்துவிட்டு, இப்பொழுது திவ்ய கண்டத்தின் ஶோபையையும் திருமுகத்தின்ஶோபையையும் அநுபவிக்கிறார். தேவதைகளுடைய விக்ரஹவர்ணநைகளில் பாதாதிகேசமாக அவயவங்களை ஆரோஹண க்ரமமாக அநுஸந்திக்க வேண்டுமென்று கவிகளுக்குள் ஒரு ஸமய முண்டு. அதை அநுஸரித்தே இவ்விடத்தில் ஆரோஹணக்ரமம் அவலம்பிக்கப்பட்டிருக்கின்றது. மநுஷ்யர்களின் ரூபத்தை வர்ணித்தால் கேசாதிபாதமாக அவரோஹண க்ரமத்தை அநுஸரிப்பது ஸம்ப்ரதாயம்.

இந்த ஶ்லோகத்தில், இரண்டு த்விதீயாந்த பதங்களே இருக்கின்றன. இவை யிரண்டுக்கும் பின்வரும் 'ஸததம்' என்னும் ஶப்தத்துடனே அந்வயம்.

𑌉𑌦𑌗𑍍𑌰𑌪𑍀𑌨𑌾𑌂𑌸𑌵𑌿𑌲𑌮𑍍𑌬𑌿𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑌾𑌲𑌕𑌾𑌵𑌲𑍀𑌬𑌨𑍍𑌧𑍁𑌰𑌕𑌮𑍍𑌬𑍁𑌕𑌨𑍍𑌧𑌰𑌮𑍍 - உந்நதங்களாயும் பருத்துமிருக்கும் தோள்கள்

வரையில் தொங்கிக்கொண்டிருக்கும் குண்டலத்தினுலும் சூர்ண குந்தளங்களினுலும் ஸுந்தரமாயுள்ள ஶங்கம்போன்ற கழுத்தை யுடைய. 'கம்பு' என்பது ஶங்கத்திற்குப் பெயர். அது போல அபிராமமான கழுத்து 'கம்புகந்தரம்' என்று சொல்லப் படுகின்றது; அதாவது - மூன்றுரேகைகளினுல் அலங்கரிக்கப் பட்ட என்று தாத்பர்யம்.

"ரேகாத்ரயாங்கிதா க்ரீவா கம்புக்ரீவேதி கத்யதே"

[மூன்று ரேகைகளுள்ள கழுத்துக்கு 'கம்புக்ரீவா' என்று பெயர்] என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

குண்டலம், ஸ்வர்ணமயமானதனுல், ஸ்வர்ணவர்ணமுள்ளது; அளகங்கள் கறுப்புவர்ணமுள்ளவை; இவை இரண்டையும் இங்கே சேர்த்துச் சொன்னது, பரபாக காந்தியை வ்யஞ்ஜிப்பிக்கும் பொருட்டே.

"ஸஞ்சஸஸஞ்சிதகுண்டலாளிகாவதீர்ண

கர்ணாரவிந்தகந்தரः"

என்று ஸ்ரீ ஆழ்வான் அநுஸந்தித்திருக்கிருர்.

உவஸ்ரியா ந்யக்க்ருதவர்ண நிர்மலாத்ர தாமரஸபிம் பாம்பாராஜோஜ்ஜ்வலஶ்ரியம் - தனது முக காந்தியினுல் திக்க ரிக்கப்பட்ட பூர்ணநிர்மல சந்த்ர பிம்பத்தையும் தாமரஸ் புஷ்பத்தி னுடைய உஜ்ஜ்வல ஶோபையையும் உடைத்தாயிருக்கிற. அதா வது - பூர்ண சந்த்ரனே அதிரமணீயம்; அந்தச் சந்த்ரன் நிர்மல் ஞக (அதாவது - களங்கமற்றவனுக) இருந்தால், ரமணீயதரனு வான். அந்தச் சந்த்ரன்கூடப் பகவானுடைய முகத்திற்கு ஈடா கான் என்பது தாத்பர்யம். அதேமாதிரி, தாமரஸ புஷ்ப ஸாமாந் யமே அழகான ஒரு பொருள்; அந்தப் புஷ்பம் அப்பொழுதுதான் மலர்ந்ததாகவும் ஸௌகுமார்யம் முதலிய குணங்கள் பொருந்தின தாகவுமிருந்தால், அதன் ஶோபை அளவற்றதாகவே இருக்கும். அப்படிப்பட்ட உஜ்ஜ்வல ஶோபையும் இந்த முகஶோபைக்கு ஒப் பாகாது என்பதுகருத்து.

எஸ். வாஸுதேவன்.

461

ஸ்ரீரஸ்து.

ப்ரஹ்மஸூத்ரத்தில் ஓர் ஶோதம்.

ப்ரஹ்மஸூத்ரத்தில் ஸமந்வயாத்யாயத்தில் ஸ்பஷ்ட ஜீவலிங்கக வாக்யவிசாரரூபமான த்ருதீய பாதத்தின் முதலதிகாணமான த்யுப்வாத்யதிகரணத்தில் ஸ்தித்யதநாப்யாஞ்ச என்பது கடைசியான குணஸூத்ரம். இதற்கு முண்டகோபநிஷத்தில் த்ருதீய முண்டகத்தின் 'த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே । தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்வத்த்யநஶ்நந்நந்யோ அபிசாகஶீதீ', என்கிற முதல் வாக்யம் விஷயவாக்யம். இந்த ஸூத்ரத்திற்கு அர்த்தம், ஏகஸ்ய கர்மபலாதநமில்லாமல் நிரதிஶய தீப்தியோடு சரீரத்தின் மத்யத்தில் ஸ்திதியாலும், அந்யஸ்ய கர்மபலத்தின் அநுபவத்தாலும், என்றாகின்றது. இந்த ஸூத்ரத்தில் சொல்லப்பட்ட இரண்டு ஹேதுக்களும் எந்த ஸாத்யத்தோடு அந்வயிக்குமென்று விசாரிப்போம். இந்த அதிகரணத்தின் ப்ரதாந ஸூத்ரமான த்யுப்வாத்யாயதநம் ஸ்வஶப்தாத் - என்கிற ஸூத்ரத்தில் த்யுப்வாத்யாயதநம் பக்ஷமாகவும், பரமாத்மத்வம் ஸாத்யமாகவும், பரமாத்மாஸாதாரணமான அம்ருதஸ்யைஷ ஸேது: இத்யாதி சப்தம் ஹேதுவாகவும், காணப்படுகிறது. அந்த ஸாத்யத்தில் ஸ்தித்யதநங்களாகிற இரண்டு ஹேதுக்களும் அந்வயிக்குமென்று சொல்லமுடியாது. பரமாத்மத்வ ரூபமான ஸாத்யத்திற்குக் கர்மபலத்தை அஶிக்காமல் நிரதிஶய தீப்தியோடு இருக்கையானது ஸாதகமானாலும், மற்றொரு ஹேதுவாகிய ஜீவநிஷ்டமான பலாதநம் த்யுப்வாத்யாயதநத்திற்குப் பரமாத்மத்வ ஸாதகமாக எப்படியாகும்? வ்யதிரேக நிர்த்

தேஶரூபமான 'நாத்மாऽஶ்ருதேர் நித்யத்வாச்ச தாப்ய:' என்கிற ஸூத்ரத்தில், நஶ்ராண ஹ்யவு, ஜீவனுமன்று என்று ஊ்ரு ஹாஊ்ராயதநத்தில் ஸாதிக்கப்பட்ட ஜீவபேதரூபமான அவாந்தர ஸாத்யத்திலும் இந்த இரண்டு ஹேதுக்களும் அந்வயிக்க வழியில்லை. முன்போல் கர்ம பலாஶந மில்லாமல் ப்ரகாஶத்தோடிருக்கை ஜீவபேத ஸாதகமானாலும், ஜீவத்வஸாதகமான கர்ம பலாதநம் ஊ்ருஹாஊ்ராயதந வ்ருத்தியாயும், ஜீவபேத ஸாதகமாயும் எப்படியாகும்? இனி ஸ்வாஹாவ வக்ஷ ஸம்பந்தேந கர்மபலாதநம் ஊ்ருஹாஊ்ராயதந வ்ருத்தியாய்க்கொண்டு, பரமாத்வதிற்கோ, ஜீவபேதத்திற்கோ ஸாதகமாகலாமென்று நவீந நையாயிகர்கள் சொல்லும் குத்ஸித யுக்திஸித்தமான அந்வயங்கள் ஸூத்ரகார ஶைலிக்குப் பொருந்தினதன்று. ஸூத்ரகாருக்கு அப்படி அபிப்ராயமிருந்தால் ஸ்வித்ருநஊநாஹ்யாம்வ என்றே ஸூத்ரத்தை இயற்றி இருப்பர். இந்த ஸூத்ரத்தை அர்த்தாபத்தி ஹேதுபரமாக்கித் தம் மதாநுஸாரமாய் ஶங்கராசார்யர் ஒரு விதமாக நயிப்பித்திருந்தபோதிலும், முன்சொன்ன ஶங்கையைப் பற்றி ஸ்ரீ பாஷ்யம் ஶ்ருதப்ரகாஶிகா பாவப்ரகாஶிகா அதிகரணஸாராவள்யாதி க்ரந்தங்களால் மந்தமதியான அடியேனுக்குத்தகுந்த ஸமாதாநம் ஏற்படவில்லை. ஆகையால் நையாயிகனைக எண்ணங்கொண்டிருக்கும், அடியேனுக்கும் த்ருப்தியை யுண்டாக்கும்படி, முன்காலத்துத் தமிழ் தர்க்கம்போல் கழகழப்பாமல், சவுக்கம்திர, பக்ஷஸாத்ய ஹேதுக்களை ஸமந்வயப்படுத்தி, ஸ்ரீபாஷ்ய ஶ்ருதப்ரகாஶிகா பங்க்திகளுக்கு மிகவும் பொருந்தும்படி. இந்தத் தீபிகையைப் பார்க்கும் சில மஹான்கள் ப்ரதிவசநம் அநுக்ரஹிப்பர்கள் என்று நம்புகிறேன்.

ஓர் விஶிஷ்டாத்வைத வேதாந்தி,

ஐ. ஶ்ரீ.

தீபிகையை வாசிக்கும் பலர்க்கு, மேலே விவரித்த சோத்ய விஷயம் புலப்படாது. யாம் அதனிமித்தம் செய்கின்ற ப்ரயத்நமும் போதாது. ஆனாலும் கொஞ்சம் எழுதுகின்றோம். ப்ரஹ்ம ஸூத்ரத்தின் முதலத்யாயம் மூன்றாவது பாதம் முதலதிகாரணத்துக்கு த்யுப்வாத்யதிகாரணமென்று பெயர். இதன் ஸூத்ரங்கள்:—

(1) 𑌦𑍍𑌯𑍁𑌭𑍍𑌵𑌾𑌦𑍍𑌯𑌾𑌯𑌤𑌨𑌂 𑌸𑍍𑌵𑌶𑌬𑍍𑌦𑌾𑌤𑍍 ।
(2) 𑌮𑍁𑌕𑍍𑌤𑍋𑌪 𑌸𑍃𑌪𑍍𑌯 𑌵𑍍𑌯𑌪𑌦𑍇𑌶𑌾𑌤𑍍 ।
(3) 𑌨𑌾𑌨𑍁𑌮𑌾𑌨 𑌮𑌤𑌚𑍍𑌛𑌬𑍍𑌦𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌾𑌣𑌭𑍃𑌚𑍍𑌚 ।
(4) 𑌭𑍇𑌦𑌵𑍍𑌯𑌪𑌦𑍇𑌶𑌾𑌤𑍍
(5) 𑌪𑍍𑌰𑌕𑌰𑌣𑌾𑌤𑍍
(6) 𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌯 𑌦𑌨𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌚.

இந்த ஸூத்ரங்களுக்கு விஷயவாக்யங்கள் முண்டகோபநிஷத்தில் இரண்டாவது முண்டகத்தில் இரண்டாவது கண்டத்தில், ‘𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌯𑍌𑌃 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌚𑌾𑌨𑍍𑌤𑌰𑌿𑌕𑍍𑌷𑌂 𑌓𑌤𑌂 𑌮𑌨𑌃 𑌸𑌹𑌪𑍍𑌰𑌾𑌣𑍈𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑍈𑌃 𑌤𑌮𑍇𑌵𑍈𑌕𑌂 𑌜𑌾𑌨𑌥 𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌅𑌨𑍍𑌯𑌾 𑌵𑌾𑌚𑍋 𑌵𑌿𑌮𑍁𑌞𑍍𑌚𑌥 । 𑌅𑌮𑍃𑌤𑌸𑍍𑌯𑍈𑌷 𑌸𑍇𑌤𑍁𑌃’ ॥ என்பது முதல் ஸூத்ரத்துக்கும், மூன்றாவது முண்டகத்தில் முதல் கண்டத்தில், ‘𑌯𑌦𑌾 𑌪𑌶𑍍𑌯𑌃 𑌪𑌶𑍍𑌯𑌤𑍇 𑌰𑍁𑌕𑍍𑌮𑌵𑌰𑍍𑌣𑌂 𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌮𑍀𑌶𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌯𑍋𑌨𑌿𑌂 । 𑌤𑌦𑌾 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍 𑌪𑍁𑌣𑍍𑌯𑌪𑌾𑌪𑍇 𑌵𑌿𑌧𑍂𑌯 𑌨𑌿𑌰𑌞𑍍𑌜𑌨𑌃 𑌪𑌰𑌮𑌂 𑌸𑌾𑌮𑍍𑌯𑌮𑍁𑌪𑍈𑌤𑌿’ ॥ என்பதும், அதே முண்டகத்தின் இரண்டாம் கண்டத்தில், ‘𑌯𑌥𑌾 𑌨𑌦𑍍𑌯𑌃 𑌸𑍍𑌯𑌨𑍍𑌦𑌮𑌾𑌨𑌾𑌃 𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑍇𑌽𑌸𑍍𑌤𑌂 𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑌿 𑌨𑌾𑌮𑌰𑍂𑌪𑍇 𑌵𑌿𑌹𑌾𑌯 । 𑌤𑌥𑌾 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑍍𑌨𑌾𑌮𑌰𑍂𑌪𑌾𑌦𑍍𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌃 𑌪𑌰𑌾𑌤𑍍𑌪𑌰𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌮𑍁𑌪𑍈𑌤𑌿 𑌦𑌿𑌵𑍍𑌯𑌂’ ॥ என்பதும் இரண்டாவது ஸூத்ரத்துக்கும், த்ருதீய முண்டகத்தில் முதல்கண்டத்தில் ‘𑌸𑌮𑌾𑌨𑍇 𑌵𑍃𑌕𑍍𑌷𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌨𑌿𑌮𑌗𑍍𑌨𑍋𑌽𑌨𑍀𑌶𑌯𑌾 𑌶𑍋𑌚𑌤𑌿 𑌮𑍁𑌹𑍍𑌯𑌮𑌾𑌨𑌃 । 𑌜𑍁𑌷𑍍𑌟𑌂 𑌯𑌦𑌾 𑌪𑌶𑍍𑌯𑌤𑍍𑌯𑌨𑍍𑌯𑌮𑍀𑌶𑌮𑌸𑍍𑌯 𑌮𑌹𑌿𑌮𑌾𑌨𑌮𑌿𑌤𑌿 𑌵𑍀𑌤𑌶𑍋𑌕𑌃’ ॥ என்பது நாலாவது ஸூத்ரத்துக்கும், த்ருதீய முண்டகத்தில் முதல் கண்டத்

தில், 'த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே । தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்வத்த்ய நஶ்நந் நந்யோ அபிசாகஶீதி,' என்பது ஆருவது ஸூத்ரத்துக்கும் விஷய வாக்யங்கள்.

ஸூத்ரங்களின் ஸமுதாயமான அர்த்தம்.

(1) த்யு என்னும் மேல் லோகங்களுக்கும் பூ என்னும் கீழ் லோகங்களுக்கும் ஆதி என்பதால் ஸர்வ லோகங்களுக்கும் ஆஶ்ரயமாயிருக்கப்பட்டது பரமாத்மா. பரமாத்மாவுக்கு அஸாதாரணமான ஶப்தங்கள் ப்ரகாணத்தில் இருக்கின்றபடியாலே (2) முக்தரால் அடையத் தக்கவன் என்று சொல்லியிருக்கிறபடியாலே (3) ப்ரக்ருதியும் ஜீவனும் அன்று. அவற்றைக் குறிக்கும் ஶப்தங்கள் ப்ரகரணத்தில் இல்லாதிருக்கின்றபடியாலே (4) ஜீவனைக்காட்டிலும் பரமாத்மாவை வேருகச் சொல்லியிருக்கிறபடியாலே (5) ப்ரகரணம் பரமாத்ம ப்ரகரணமாய் இருப்பதாலே (6) நிரதிஶய ப்ரகாஶத்துடன் கூடி கர்மஸம்பந்தமின்றி ஸ்திதிமாத்ரத்துடன் பரமாத்மாவும், கர்மபலத்தை அநுபவிக்கின்றவனுய் ஜீவனும், ஒரே சரீரத்தை ஆஶ்ரயித் திருக்கிறபடியாலே—என்றிவ்வண்ணம் நிற்கின்றது.

மேற்கண்ட உபநிஷத் வாக்யங்களின் ஸமுதாய அர்த்தம்.

(1) யாதொன்றினிடம் தேவலோகம் முதலான மேல்லோகங்களும், பூமி முதலான கீழ் லோகங்களும், அந்தரிக்ஷமெனும் மத்ய லோகங்களும், எல்லா ப்ராணங்கள் உள்பட மநஸ்ஸும் இருக்கின்றனவோ, அந்த ஒரு ஆத்மாவை அறியுங்கள். மற்ற வார்த்தைகளை விட்டுவிடுங்கள். அம்ருதமாகின்ற ஸம்ஸாரத்தின் அக்கரையை இவர் அடைவிப்பிக்கின்றவர்.

(2) எப்போது இந்த வித்வானன உபாஸகன் ஆதித்யவர்ணனையும், ஜகத்ஸ்ரஷ்டாவாயும் ஜகதீஶ்வரனையும், அவ்யக்தத்துக்கு உபாதாநகாரணமாயும் இருக்கப்பட்ட பரமபுருஷனை ஸாக்ஷாத்கரிக்கின்ருனே, அப்போது புண்யபாபரூபமான உபயவித கர்மங்

களேயும் நிரஸநம் செய்துவிட்டு, ப்ரக்ருதிஸம்பந்தம் முற்றிலும் நீங்கி, அபஹத பாப்மத்வாதி குணஷ்டகங்களே யடைந்து, ப்ரஹ்மத்துடன் ஸமமான ஆகாராநுபவங்களே யடைகின்றான்.

(3) நதிகள் ஸமுத்ரத்தில் ப்ரவஹித்து அவற்றின் நாம ரூபங்களேவிட்டு எப்படி ஸமுத்ரத்துடன் ஒன்றுகின்றனவோ, அப்படியே ப்ரஹ்மத்தை அறிந்தவன், தன் நாமரூபங்களே விட்டவனாய்க் கொண்டு தீப்தியுக்தனுனவும், பரர்களுக்கும் பரனுனவனுமான புருஷனே அடைகின்றான்.

(4) ஈஶ்வராஶ்ரிதமான அதே சரீரத்தில் புருஷன் அநீசை யெனப்பட்ட ப்ரக்ருதியால் தான் பரமாத்மதுல்ய ஜ்ஞாநாநந்த லக்ஷணன் என்பதை மறந்தவனாய்த் தன் சரீரத்துடன் அபேதத்தை அடைந்தவனாய்க்கொண்டு துக்காநுபவம் செய்கிறான்.

(5) ஒரே வ்ருக்ஷத்தில் இரண்டு பக்ஷிகளென, வ்ருக்ஷம் போல் நஶிக்கக்கூடிய சரீரத்தை, ஸமாநகுணங்களுடன் கூடினவராயும், என்றும் சேர்ந்தே இருப்பவராயும் உள்ள ஜீவ பரமாத்மாக்கள் ஆஶ்ரயித்திருக்கின்றனர். அவர்களில் ஒருவன் பரிபக்வமான கர்மபலத்தை அநுபவிக்கின்றான். மற்றவர் தாத்ருஶ அநுபவமின்றி ப்ரகாஶிக்கின்றார்.

இதில் ஸர்வலோகாஶ்ரயமாயிருக்கப்பட்டது பக்ஷம், பரமாத்மத்வம் ஸாத்யம், ஸூத்ரங்களில் கண்டவை ஹேதுக்கள். முடிவான ஸூத்ரத்தில் கண்டிருக்கும் ஹேதுக்களிரண்டும் பக்ஷத்தில் அந்வயித்து மேல்கண்ட ஸாத்யத்தை ஸாதித்துக் கொடுக்குமா என்பது சோத்யம். அந்த ஹேதுக்களில் கேவலஸ்திதியானது, பக்ஷத்தில் அந்வயித்து ஸாத்யத்தை ஸாதித்துக் கொடுத்தபோதிலும், கர்மபலாநுபவரூபமான ஹேதுவானது பக்ஷத்தில் அந்வயிக்காதென்றும், ஸாத்யத்தை ஸாதித்துக் கொடுக்கமாட்டாதென்றும், சோத்யம். ஶாஸ்த்ரம் அறிந்தவர்கள் இந்தச் சோத்யத்தைப் பரிஹரிக்க அதிகாரிகள்.

பத்ராதிபர்.

ஸ்ரீ அஹோபில ந்ருஸிஹ்மன் விஷயம்.

ப்ரஹ்லாதன் சரித்ரம்.

‘𑌨𑌮𑌸𑍍𑌤𑍇 𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌾𑌕𑍍𑌷 𑌨𑌮𑌸𑍍𑌤𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮 ।
𑌨𑌮𑌸𑍍𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌾𑌤𑍍𑌮𑌨𑍍 𑌨𑌮𑌸𑍍𑌤𑍇 𑌤𑌿𑌗𑍍𑌮𑌚𑌕𑍍𑌰𑌿𑌣𑍇 ॥
𑌨𑌮𑌸𑍍𑌤𑍇 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌾𑌯 𑌨𑌮𑌸𑍍𑌤𑍇 𑌕𑌰𑍁𑌣𑌾𑌕𑌰 ।
𑌨𑌮𑌸𑍍𑌤𑍇 𑌵𑌿𑌶𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌯 𑌨𑌮𑌸𑍍𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌮𑍂𑌰𑍍𑌤𑌯𑍇 ॥
𑌨𑌮𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑌦𑍇𑌵𑌾𑌯 𑌗𑍋𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌹𑌿𑌤𑌾𑌯 𑌚 ।
𑌜𑌗𑌦𑍍𑌧𑌿𑌤𑌾𑌯 𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌯 𑌗𑍋𑌵𑌿𑌂𑌦𑌾𑌯 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃 ॥
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌤𑍍𑌵𑍇 𑌸𑍃𑌜𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌸𑍍𑌥𑌿𑌤𑍌 𑌪𑌾𑌲𑌯𑌤𑍇 𑌪𑍁𑌨𑌃 ।
𑌰𑍁𑌦𑍍𑌰𑌰𑍂𑌪𑌾𑌯 𑌕𑌲𑍍𑌪𑌾𑌂𑌤𑍇 𑌨𑌮𑌸𑍍𑌤𑍁𑌭𑍍𑌯𑌂 𑌤𑍍𑌰𑌿𑌮𑍂𑌰𑍍𑌤𑌯𑍇 ॥’

“தாமரைக்கண்ணு! எல்லாருடைய ஹ்ருதய கமலங்களில் வஸிப்பவனே! உன்னை நமஸ்கரிக்கின்றேன். புருஷோத்தமா! உன்னை நமஸ்கரிக்கின்றேன். ஸர்வலோகங்களுக்கும் ஆத்மாவாக இருப்பவனே! உன்னை நமஸ்கரிக்கின்றேன். தீக்ஷ்ணமான சக்ராயுதமுடைய உன்பொருட்டு நமஸ்காரம் செய்கின்றேன். வாஸுதேவனை உன்பொருட்டு நமஸ்காரம் செய்கின்றேன். கருணாகர! உன்னை நமஸ்கரிக்கின்றேன். விச்வத்தை ரூபமாக வுடைய உன்பொருட்டு நமஸ்காரம் செய்கின்றேன். ஸர்வத்தையும் ஶரீரங்களாயுடைய உன்பொருட்டு நமஸ்காரம் செய்கின்றேன். வேதத்தில் நிஷ்டர்களான ப்ராஹ்மணர்க்குத் தேவனும், கோப்ராஹ்மணர்க்கு ஹிதனும், ஜகத்துக்கு ஹிதம் செய்பவனுமான கிருஷ்ணனெனும் கோவிந்தன் பொருட்டுப் பலதரம் நமஸ்காரம் செய்கின்றேன். ப்ரஹ்மாவினுடைய ரூபத்தை யடைந்து ஸர்வத்தையும் ஸ்ருஷ்டிக்கப்பட்டவனும், மறுபடியும் ஸ்ருஷ்டிக்கப்பட்டவைகளை நிஜ ரூபத்தால் பரிபாலிக்கப்பட்டவனும், கல்பத்தின் முடிவில் ருத்ரரூபத்தைத் தரிக்கப்பட்டவனுமான, த்ரிமூர்த்தியாகிற உன்பொருட்டு நமஸ்காரம் செய்கின்றேன்.”

"தேவர், யக்ஷர், அஸுரர், ஸித்தர், நாகர், கந்தர்வர், பிசாசர், ராக்ஷஸர், மனிதர், ம்ருகங்கள், பக்ஷிகள், ஸ்தாவரங்கள், பூச்சிகள், ஊரும் ஜந்துக்கள், பூமி, ஜலம், அக்நி, ஆகாசம், வாயு, சப்தம் ஸ்பர்சம், ரஸம், ரூபம், கந்தம், மநஸ், புத்தி, அஹங்காரம், ஸத்வாதிகுணங்கள், இவற்றுள் விகார நாச ரஹிதனை யிருக்கும் ஜீவன், இவை யெல்லாம், ஓ அச்யுதனே! நீதான். வித்யை எனும் ஜ்ஞாநம், அவித்யை யெனும் அஜ்ஞாநம், ஸத்ய மெனும் ஆத்மா, விகாரத்துடன் கூடின அஸத்ய மெனும் ப்ரக்ருதி, விஷமெனும் ஸம்ஸாரம், அம்ருத மெனும் முக்தி, வேதங்களால் வெளியிடப்பட்ட ப்ரவ்ருத்தி லக்ஷணமானதும், நிவ்ருத்தி லக்ஷணமானதுமாய் விளங்கும் கர்மங்கள், ஸமஸ்த கர்மங்களின் பலன்களை அநுபவிக்கும் ஜீவன், கர்மத்துக்கு உபயோகமாகும் வஸ்துக்கள், கர்மங்களின் பலம், இவை எல்லாம், ஓ விஷ்ணோ! நீயே."

'யந்மய்யந்யத்ர ததாசேஷபூதேஷு ததா ச லோகேஷு ।
தவைவ வ்யாப்திரைச்வர்ய குணஸம்ஸூசிகீ ப்ரபோ ॥ த்வாம் யோகிநச் சிந்தயந்தி த்வாம் யஜந்தி ச யாஜகா: । ஹவ்யகவ்யபுகேகஸ் த்வம் பித்ருதேவ ஸ்வரூபத்ருக் ॥'

"என்னிடமும், மற்றெங்கும், எல்லா பூதங்களிலும், எல்லா லோகங்களிலும், ஸத்தாகவும் சித்தாகவுமிருக்கும் உனது வ்யாப்தியானது நீ ஈச்வரனென்பதையும் ஸத்யஸங்கல்பாதி கல்யாகுண விசிஷ்டன் என்பதையும் காட்டுகின்றது. ஆனபடியால், யோகிகள் உன்னைத் தான் த்யாநிக்கின்றனர். யாகங்கள் செய்பவர் உன்னை உத்தேசித்தே அவற்றைச் செய்கின்றனர். நீ ஒருவனே பித்ரு ரூபதாரனாகக் கவ்யங்களைப் புசிக்கின்றனை; தேவரூபத்துடன் கூடினவனாக ஹவ்யங்களை அருந்துகின்றனை."

'ரூபம் மஹத் தே ஸ்திதமத்ர விச்வம் ததச்ச ஸூக்ஷ்மம் ஜகதேததீச । ரூபாணி ஸர்வாணி ச பூதபேதாஸ் தேஷ்வந்தராத்மாக்யமதீவ ஸூக்ஷ்மம் ॥ தஸ்மாச்ச ஸூக்ஷ்மாதி விசேஷணாநாம் அகோசரே யத் பரமாத்மரூபம் । கிமப்யசிந்த்யம் தவ ரூபமஸ்தி தஸ்மை நமஸ்தே புருஷோத்தமாய' ॥

"ஓ அச்யுத! உனது ரூபமானது ஸ்வரூபத்தாலும் குணங்களாலும் மஹத். விச்வம் எனும் ப்ரஹ்மாண்டம் அதை ஆச்ரயித்து அதற்குள் நிற்கின்றது. ஈசனே! இந்த ஜகத்தாகிற உனது விராட்ரூபம் அதைக்காட்டிலும் ஸூக்ஷ்மம். அதில் வஸிக்கின்ற தேவ மநுஷ்ய ம்ருக பக்ஷி முதலான சரீரத்துடன் கூடிய ப்ராணி விசேஷங்கள் இன்னும் ஸூக்ஷ்மமான உனது ரூபங்கள். அவற்றினுள் இருக்கும் ஆத்மா எனும் க்ஷேத்ரஜ்ஞன் உனது மிகவும் ஸூக்ஷ்மமான ரூபம். அதற்கும் மேலாக, ஸூக்ஷ்மங்களென விவரிக்கப்பட்ட விசேஷ வஸ்துக்களுக்கு விஷயமாகாமல் இருக்கும், இன்னதென நினைக்கவும் கூடாத உனது பரமார்த்தமான ரூபம் இருக்கின்றதே, அந்தப் புருஷோத்தமனாகிய உன் பொருட்டு நமஸ்காரம் செய்கின்றேன்."

'𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑍇𑌷𑍁 𑌸𑌰𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑍍 𑌯𑌾 𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑌪𑌰𑌾 𑌤𑌵 ।
𑌗𑍁𑌣𑌾𑌶𑍍𑌰𑌯𑌾 𑌨𑌮𑌸𑍍𑌤𑌸𑍍𑌯𑍈 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌾𑌯𑍈 𑌸𑍁𑌰𑍇𑌶𑍍𑌵𑌰 ॥
𑌯𑌾𑌤𑍀𑌤𑌗𑍋𑌚𑌰𑌾 𑌵𑌾𑌚𑌾𑌂 𑌮𑌨𑌸𑌾𑌂 𑌚𑌾𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑌾 ।
𑌜𑍍𑌞𑌾𑌨𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑌰𑌿𑌚𑍍𑌛𑍇𑌦𑍍𑌯𑌾 𑌤𑌾𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌸𑍍𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑍀𑌂 𑌪𑌰𑌾𑌮𑍍' ॥

"ஓ ஸர்வாத்மந்! பரமேச்வர! ஸத்வாதி குணங்களுக்கு ஆச்ரயபூதையாய், ப்ரவாஹத்தால் நித்யையாய், எல்லாபூதங்களினிடமும் இருக்கின்ற நிக்ருஷ்டையான உனது ஜடசக்தி எவளோ, அவளை நமஸ்கரிக்கின்றேன்; யாதொரு (உனது சித் சக்தியானவள்) வாங்மநஸாதிகளுக்கு எட்டாதவளாயும், ஜாதி குணாதி விசேஷங்களற்றவளாயும், ஜ்ஞானிகளுடைய ஜ்ஞானத்தால் அநுமிக்கக் கூடியவளாயும் இருக்கின்றாளோ, அப்படிப்பட்ட பரமேச்வரியையும் நமஸ்கரிக்கின்றேன்."

'𑍐 𑌨𑌮𑍋 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌾𑌯 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌭𑌗𑌵𑌤𑍇 𑌸𑌦𑌾 । 𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑌂 𑌨 𑌯𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑌿 𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑍋𑌽𑌖𑌿𑌲𑌸𑍍𑌯 𑌯𑌃 । 𑌨𑌮𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑍈 𑌨𑌮𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑍈 𑌨𑌮𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑍈 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑍇 । 𑌨𑌾𑌮𑌰𑍂𑌪𑌂 𑌨 𑌯𑌸𑍍𑌯𑍈𑌕𑍋 𑌯𑍋𑌽𑌸𑍍𑌤𑌿𑌤𑍍𑌵𑍇𑌨𑍋𑌪𑌲𑌭𑍍𑌯𑌤𑍇 ॥ 𑌯𑌸𑍍𑌯𑌾𑌵𑌤𑌾𑌰𑌰𑍂𑌪𑌾𑌣𑌿 𑌸𑌮𑌰𑍍𑌚𑌨𑍍𑌤𑌿 𑌦𑌿𑌵𑍌𑌕𑌸𑌃 । 𑌅𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌃 𑌪𑌰𑌂 𑌰𑍂𑌪𑌂 𑌨𑌮𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑍈 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑍇 । 𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑌸𑍍𑌤𑌿𑌷𑍍𑌠𑌨𑍍𑌨𑌶𑍇𑌷𑌸𑍍𑌯 𑌪𑌶𑍍𑌯𑌤𑍀𑌶𑌃 𑌶𑍁𑌭𑌾𑌶𑍁𑌭𑌮𑍍 । 𑌤𑌂 𑌸𑌰𑍍𑌵𑌸𑌾𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌂 𑌨𑌮𑌸𑍍𑌯𑍇 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍 ॥ 𑌨𑌮𑍋𑌽𑌸𑍍𑌤𑍁

𑌵𑌿𑌷𑍍𑌣𑌵𑍇 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌯𑌸𑍍𑌯𑌾𑌭𑌿𑌨𑍍𑌨𑌮𑌿𑌦𑌂𑌜𑌗𑌤𑍍 । 𑌧𑍍𑌯𑍇𑌯 𑌸𑍍𑌸𑌜𑌗𑌤𑌾𑌮𑌾𑌦𑍍𑌯
𑌸𑍍𑌸 𑌪𑍍𑌰𑌸𑍀𑌦𑌤𑍁 𑌮𑍇𑌽𑌵𑍍𑌯𑌯𑌃 ॥ 𑌯𑌤𑍍𑌰𑍋𑌤𑌮𑍇𑌤𑌚𑍍𑌚 𑌪𑍍𑌰𑍋𑌤𑌂𑌚 𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑌕𑍍𑌷
𑌰𑌸𑌂𑌜𑍍𑌞𑌕𑍇 । 𑌆𑌧𑌾𑌰𑌭𑍂𑌤 𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌸𑌪𑍍𑌰𑌸𑍀𑌦𑌤𑍁 𑌮𑍇𑌹𑌰𑌿𑌃 ॥
𑍐 𑌨𑌮𑍋 𑌵𑌿𑌷𑍍𑌣𑌵𑍇 𑌤𑌸𑍍𑌮𑍈 𑌨𑌮𑌸𑍍𑌤𑌸𑍍𑌮𑍈 𑌪𑍁𑌨𑌃𑌪𑍁𑌨𑌃 । 𑌯𑌤𑍍𑌰 𑌸
𑌰𑍍𑌵𑌂 𑌯𑌤𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌯𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌸𑌰𑍍𑌵𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑌃 ॥ 𑌸𑌰𑍍𑌵𑌗𑌤𑍍𑌵𑌾𑌦𑌨𑌨𑍍𑌤𑌸𑍍𑌯
𑌸 𑌏𑌵𑌾𑌹𑌮𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 । 𑌮𑌤𑍍𑌤𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌮𑌹𑌂𑌸𑌰𑍍𑌵𑌂 𑌮𑌯𑌿𑌸𑌰𑍍𑌵𑌂 𑌸𑌨𑌾
𑌤𑌨𑍇 ॥ 𑌅𑌹𑌮𑍇𑌵𑌾𑌕𑍍𑌷𑌯𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌃 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌸𑌂𑌶𑍍𑌰𑌯𑌃 । 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮
𑌸𑌂𑌜𑍍𑌞𑍋 𑌹𑌮𑍇𑌵𑌾𑌗𑍍𑌰𑍇 𑌤𑌥𑌾𑌨𑍍𑌤𑍇 𑌚 𑌪𑌰𑌃𑌪𑍁𑌮𑌾𑌨𑍍 ’ ॥

"இப்படி ஶக்தித்வய விஶிஷ்டனுய், நிரதிஶய ஐஶ்வர்ய யுக்தனுய், ப்ரணவ மந்த்ர த்வாதஶாக்ஷர மந்தர ப்ரதிபாத்யனுய், பரிபூர்ண அர்த்த விஶிஷ்ட பகவத் ஶப்தவாச்யனுய், எல்லாமவனிடம் நிற்க எல்லாவற்றினிடமும் இருப்பவனுய், எவனிருக்கின்ருனே, யாவத்துக்கும் ஆதாரபூதனுயும் ஆத்மாவாகவு மிருப்பதால், எவனே விட்டு யாதொன்றும் பிரிந்திலதோ, எவன் கார்ய பூதமான ஜகத்தின் ஸர்வதோஷங்களின் ஸம்பந்தமின்றி விலக்ஷணு யிருக்கின்ருனே, அப்படிப்பட்ட வாஸுதேவன் பொருட்டு ஸதா நமஸ்கரிக்கின்றேன். எவனுக்கு நாமமும் ரூபமும் இல்லேயோ, எவன் இருக்கின்ருன் என்று (அதாவது ஸத்ரூபமாக) மாத்ரம் அறியத்தக்கவனே, அப்படிப்பட்ட மஹாத்மாவும் பரப்ரஹ்மமு மாகும் அவனது ப்ரபஞ்ச ரூபத்தின் பொருட்டு நமஸ்கரிக்கின்றேன்; அவனது க்ஷேத்ரஜ்ஞ ரூபத்தின் பொருட்டு நமஸ்கரிக்கின்றேன்; அவன் பரரூபத்தின் பொருட்டு நமஸ்கரிக்கின்றேன். எவனுடைய பரரூபத்தைக் காணுதவராய்த் தேவலோக வாஸிகளும், அவதார ரூபங்களே அர்ச்சிக்கின்றனரோ, அப்படிப்பட்ட பரமாத்மாவின் பொருட்டு நமஸ்கரிக்கின்றேன். யாவர்க்குள்ளும் இருப்பதால், தேவதாந்த்ரங்களே உபாஸிப்பவருடைய ஶுப கர்மங்களேயும் அஶுப கர்மங்களேயும், அந்தந்த தேவதைக்குள் அந்தர்யாமியாக நின்று பார்த்தருளும் ஈஶனும் ஸர்வ ஸாக்ஷியாகவு மிருக்கும் பரமேஶ்வரனுன விஷ்ணுவை நமஸ்கரிக்கின்றேன். ஜகத் அபிந்நனுக இருக்கும் விராட் எனப்படும் விஷ்ணுவின் பொருட்டு நமஸ்காரம் செய்கிறேன். ஜகஜ்ஜந்மாதி காரணனுன அவன் த்யானிக்கத் தக்கவன். காரணனுக

இருந்தும் ஜகத்தின் விகாரங்கள் எவனைத் தொடாவோ, அப்படிப்பட்ட அவ்யயன் எனக்கு க்ருபை பண்ணட்டும். யாதொரு அக்ஷர ஶப்த வாச்யனிடம் இந்த விஶ்வமானது நெடுகிலும் குறுக்கிலுமாக நெய்யப்பட்டுளதோ, எவன் ஸர்வத்துக்கும் ஆதாரமாக நிற்கின்றனோ, அந்த ஹரி என்னிடம் ஸந்துஷ்டனுகட்டும். எவனிடம் ப்ரளய தஶையில் ஸர்வமும் லயித்திருக்கிறதோ, அவன் பொருட்டு நமஸ்காரம். எவனிடமிருந்து ஸ்ருஷ்டி காலத்தில் எல்லாம் உத்பந்நமாகின்றதோ, அவன் பொருட்டு நமஸ்காரம். ஆதலால் ஸர்வம் எவன் ரூபமாக நிற்கின்றதோ, அவன் பொருட்டு நமஸ்காரம். எவன் ஸர்வத்துக்கும் ஆஶ்ரய பூதனுகி ப்ரணவத்துக்கும் ஷடக்ஷர மந்த்ரத்துக்கும் ப்ரதிபாத்யனுகின்றனோ, அப்படிப்பட்ட விஷ்ணுவின் பொருட்டு அஸக்ருத் நமஸ்காரம் செய்கின்றேன். அநந்தன் ஸர்வத்தையும் வ்யாபித்து ஸர்வத்துக்கும் ஆத்மாவா யிருக்கின்றான். ஆதலால் நான் அவனுகவே யிருக்கின்றேன். எல்லாம் என்னிடம் உண்டாயது. ஸர்வமும் யானே. ஸநாதநனுகிய என்னிடமே ஸர்வமும் லயிக்கின்றது. விகாரரஹிதனும் நித்யனும் ஸ்வமஹிமையில் ப்ரதிஷ்டிதனை பரமாத்மாவும் நானே. ஸ்ருஷ்டிக்கு முன்னுல் ப்ரஹ்ம எனும் பெயருடையவன் நானே. ப்ரளயத்துக்குப் பிறகும் (யாவராலு மடையப்பட்ட) பரமபுருஷனும் நானே."

ஏவம் ஸஞ்சிந்தயந் விஷ்ணுமபேதேநாத்மநோ த்விஜ ।
தந்மயத்வமவாபாக்ர்யம் மேநே சாத்மாநமச்யுதம் ॥
விஸஸ்மார ததாத்மாநம் நாந்யத் கிஞ்சிதஜாநத ।
அஹமேவாவ்யயோ நித்ய: பரமாத்மேத்யசிந்தயத் ॥
தஸ்ய தத்பாவநாயோகாத் க்ஷீணபாபஸ்ய வை க்ரமாத் ।
ஶுத்தேந்த:கரணே விஷ்ணு: தஸ்தௌ ஜ்ஞாநமயோச்யுத: ॥
யோகப்ரபாவாச்ச ப்ரஹ்லாதே ஜாதே விஷ்ணுமயேஸுரே ।
சலத்யுரகபந்தைஸ்தைர் மைத்ரேய த்ருடிதம் க்ஷணாத் ॥
ப்ராந்தக்ராஹகண: ஸோர்மிர் யயௌ க்ஷோபம் மஹார்ணவ: ।
சசால ச மஹீ ஸர்வா ஸஶைலவநகாநநா ॥
ஸ ச தம் ஶைலஸங்காதம் தைத்யைர்ந்யஸ்தமதோபரி ।
உத்க்ஷிப்ய தஸ்மாத் ஸலிலாந் நிஶ்சக்ராம மஹாமதி: ॥

த்ருஷ்ட்வா ச ஸ ஜகத்ஸர்வம் ககநாத்யுபலக்ஷிதம் ।
ப்ரஹ்லாதோஸ்மீதி ஸஸ்மார புநராத்மாநமாத்மநா ॥
துஷ்டாவ ச புநர்தீமாநநாதிம் புருஷோத்தமம் ।
ஏகாக்ரமதிரவ்யக்ரோ யதவாக்காயமாநஸ: ' ॥

இவ்விதமாகத் தனக்கும் பகவானுக்கும் பேதத்தை மறந்து விஷ்ணுவை த்யாநித்துக்கொண்டு உத்க்ருஷ்டமான பகவந் மயத்வத்தை யடைந்து, தன்னை அச்யுதனாகவே நினைத்தான். தான் ப்ரஹ்லாத னென்பதை அப்போது மறந்தான். வேறொன்றையும் அறிந்தானில்லை. தான் விகாரரஹிதன், நித்யன், பரமாத்மா, என்று எண்ணினான். இப்படி அவன் யோகத்தில் பகவத்யாந காஷ்டை யெனத்தக்க ஸமாதி தசையை அடைந்த காலத்தில், வேறொரு ஸ்மரணமும் இன்றி, அவிச்சிந்நமாகப் பகவத் ஸ்மரணமே ப்ரகாசிக்கு மளவில், க்ரமேண ஸர்வ பாபமும் அவனை விலகிப் போகவே, பரிஶுத்தமாகப் போந்த அவன் ஹ்ருதயத்தில் நிலைத்துக் கேவலம் ஜ்ஞாநாகாரனாக விஷ்ணு விளங்கினார். அஸுரனாய்ப் பிறந்த ப்ரஹ்லாதன் தன்யோகத்தின் ப்ரபாவத்தால் விஷ்ணுமயனாக ஆய்விட்டுச் சலித்தபோது, அவனைக் கட்டின நாகபாஶங்கள் தத்க்ஷணமே அறுபட்டுப்போயின; ஸமுத்ரமும் அலைகள் பெருகி, நீர்வாழும் முதலை முதலான ஜந்துக்கள் மயங்கியோடக் கலக்கமடைந்தது. பூமிமுழுதும், அதன் மலை வநங்களுடன் அசைவுற்றது. அந்த மஹாபுத்திமானான ப்ரஹ்லாதன், தைத்யர்களால் தன்மேல் போடப்பட்ட மலைக்கூட்டங்களைக் கீழே தள்ளிவிட்டு, அந்த ஸமுத்ரத்தினின்று வெளியேறினான். மறுபடியும் ஆகாஶம் முதலானவற்றுடன் கூடிய ஜகத்தைப் பார்த்து ப்ரஹ்லாதன் நான் என்று தன்னை மறுபடியும் ஸ்மரித்தான். தத்வதர்சியான அவன் தன் புத்தியினின்று இதர வ்யாபாரங்களை ஒழித்து, அதைப் பகவந் மாத்ரபரமாக்கி, மநோவாக்காயங்களை யடக்கி, அநாதியாய் நின்ற புருஷோத்தமனை மறுபடியும் ஸ்துதித்தான்.

'ஓம் நம: பரமார்த்தார்த்த ஸ்தூலஸூக்ஷ்ம க்ஷராக்ஷர ।
வ்யக்தாவ்யக்த கலாதீத ஸகலேஶ நிரஞ்ஜந ॥
குணாஞ்ஜந குணாதார நிர்குணாத்மந் குணஸ்தித ।
மூர்த்தாமூர்த்த மஹாமூர்த்தே ஸூக்ஷ்மமூர்த்தே ஸ்புடாஸ்புட ॥

க்ஷராக்ஷரஸ்வ ஸகலாத்மந் வித்³யாவித்³யாமயாவ்யக்த ।

ஸத³ஸத்³ரூப ஸத்³பா⁴வ ஸத³ஸத்³பா⁴வபா⁴வந ॥

நித்யாநித்யப்ரபஞ்சாத்மந் நிஷ்ப்ரபஞ்சாமலாஶ்ரித ।

ஏகாநேக நமஸ்துப்⁴யம் வாஸுதே³வாதி³காரண ॥

யஸ்ஸகலநிஷ்கலப்ரகாஶோ யஸ்யைவம் பரமாத்மா நம ஸர்வபரமாத்மநே । விஶ்வாய தைஜஸாய ப்ராஜ்ஞாய நமோஸ்து தே தஸ்மை பராத்பராய' ॥

"ப்ரணவஸ்வரூபியான உன்பொருட்டு நமஸ்காரம். பரமபுருஷார்த்த ஸ்வரூபனே! (அல்லது ஜ்ஞாநரூபனே! அர்த்தரூபனே!) ஸூக்ஷ்மமான அக்ஷரமெனும் சித்ரூபனே! ஸ்தூலமான க்ஷரமெனும் அசித்ரூபனே! வ்யக்தமான ஜகத்ரூபனே! அவ்யக்தமெனும் ஜகத்காரணமான ப்ரதாநரூபனே! கலைகளெனும் இந்த்ரியங்களையும் பஞ்சமஹா பூதங்களையும் அதிக்ரமித்தவனே! கலைகளுடன்கூடிய ஜீவசரீரியே! ஈசனே! தோஷமற்றவனே! ஸ்வகுணங்களைப் பக்தர்களுக்கு அநுகூலமாகும்படி ப்ரகாசிப்பிக்கின்றவனே! குணங்களுக்கு ஆதாரபூதனே! ஸத்வாதிகுண ரஹிதமான ஸ்வரூபத்துடன் கூடினவனே! ஸமஸ்த கல்யாணகுண விசிஷ்டனே! ஸ்தூலமாயும் ஸூக்ஷ்மமாயும் இருக்கும் ப்ரபஞ்சரூபனே! விச்வரூபாத்யாயத்தில் விவரிக்கப்பட்ட மஹாமூர்த்தியே! அந்தர்யாமியெனும் ஸூக்ஷ்மமூர்த்தியே! பக்தர்களுக்கு ப்ரகாசிக்கப்பட்டவனே! மற்றவர்களுக்கு அகப்படாதவனே! ஸம்ஹாரகாலத்தில் பயங்கரமான ரூபம் கொள்கின்றவனே! ஸ்வீரூபத்தில் ஸௌம்யமான ரூபத்துடன் கூடினவனே! கர்ம ஸ்வரூபனே! ஜ்ஞாந ஸ்வரூபனே! அச்யுதனே! ஸத்தாகிய ஜீவரூபனே! அஸத்தாகிய ப்ரக்ருதி ரூபனே! ஸ்வயம் ஸத்ய ஸ்வரூபனே! அல்லது ஸத்தாகவும் அஸத்தாகவும் மிருக்கும் ஜகத்துக்கு உத்பத்திகாரணனே! ஸத்தாகவும் அஸத்தாகவுமிருக்கும் பதார்த்தங்களைப் பரிபாலிக்கின்றவனே! நித்யப்ரபஞ்சரூபனே! அநித்யப்ரபஞ்சரூபனே! ப்ரபஞ்சாதீதனே! பரிசுத்தமான ஜ்ஞாநிகளால் ஆச்ரயிக்கப்பட்டவனே! காரணரூபத்தால் ஒருவனே! அல்லது பரமார்த்த ரூபத்தால் ஒருவனே! கார்யரூபங்களால் அநேகனே! அல்லது பக்தர்க் கிரங்கிப் பலரூபங்க ளடைகின்

றவனே! வாஸுதேவனே! காரண வஸ்துக்களுக் கெல்லாம் காரணமா யிருக்கின்றவனே! உன்பொருட்டு நமஸ்காரம். எவன் ஸ்தூலமான ஜகத்ரூபியாக யாவர்க்கும் தெரிகின்றானோ, ஸூக்ஷ்மமான அந்தர்யாமி ரூபியாக எல்லாருடைய அந்தரிந்த்ரியங்களையும் பாஹ்யேந்த்ரியங்களையும் அவ்வவற்றின் வ்யாபாரங்களில் ப்ரவ்ருத்திக்கச் செய்வதால் ப்ரகாசிக்கின்றானோ, எவன் ஸர்வ வஸ்துக்களுக்கும் சரீரியாக விருக்கின்றானோ, எவன் ஸர்வ வஸ்து விலக்ஷணனாக விருக்கின்றானோ, ஸ்ருஜ்யாளுடைய கர்மங்களை அபேக்ஷித்து ஸ்ருஷ்டிப்பதால், விச்வ ஸ்ருஷ்டிக்குக் காரணமாகாத எவனிடமிருந்து இந்த விச்வம் உண்டாயிற்றோ, அப்படிப்பட்ட புருஷோத்தமன் பொருட்டு நமஸ்கரிக்கின்றேன்."

மநஸ்ஸை அவனிடம் செலுத்தி மேல் விவரித்த ப்ரகாரம் ஸ்தோத்ரம் செய்த ப்ரஹ்லாதன் முன்பாக பீதாம்பரதாரனாகப் பகவான் ஹரியானவர் ப்ரத்யக்ஷமானார். உடல் நடுக்கத்துடன் பகவானைக் கண்டு எழுந்தான். வாய் குளர நமோஸ்து விஷ்ணவே (நமோஸ்து விஷ்ணவே) என்றுருதரம் சொல்லி நின்றான். மீளவும்,

'தேவ ப்ரபந்நார்திஹர ப்ரஸாதம் குரு கேஶவ।
அவலோகநதாநேந பூயோ மாம் பாவயாவ்யய'।

"தேவனே! சரணாகதருடைய துன்பங்களைப் போக்குகின்றவனே! கேசவனே! நாசரஹிதனே! க்ருபைபண்ணும். உமது ப்ரத்யக்ஷ தர்சனத்தைக் கொடுத்து மறுபடியும் என்னை ரக்ஷியும்" என்றனன். பகவானும், "ப்ரஹ்லாத! ஈஷத்தும் மற்றொன்றில் வ்யபிசரிக்காத பக்தியை என்விஷயத்தில் செய்கின்ற உன்னிடம் நான் ப்ரஸந்நன் (த்ருபதன், ஸந்துஷ்டன்) ஆனேன். உனக்கு இச்சையிருக்கிறபடி என்னிடம் நீ வரம் கேட்கலாம்" என்றனர். அதைக்கேட்டு ப்ரஹ்லாதன்,

'நாத யோநிஸஹஸ்ரேஷு யேஷு யேஷு வ்ரஜாம்யஹம்।
தேஷு தேஷ்வச்யுதா பக்தி: அச்யுதாஸ்து ஸதா த்வயி ॥
யா ப்ரீதிரவிவேகாநாம் விஷயேஷ்வநபாயிநீ।
த்வாமநுஸ்மரத ஸா மே ஹ்ருதயாந்மாபஸர்பது'॥

"நாதனே! அச்யுத! அநேகமாயிரம் ஜந்மங்களில், எந்தெந்த ஜந்மங்களை நானடைந்தபோதிலும், அவற்றுள், எனக்கு உன்னிடம் எப்போதும் க்ஷணத்தும் குறையாத பக்தியானது உண்டாகட்டும். அவிவேகிகளுக்கு அவரிச்சிக்கும் விஷயங்களில் நிலைத்து எப்படிப்பட்ட ப்ரீதி யுண்டாகின்றதோ, உன்னிடம் அப்படிப்பட்ட ப்ரீதி உன்னை இடைவிடாது ஸ்மரிக்கும் எனது ஹ்ருதயத்தினின்று விலக வேண்டாம்" என்றுரைத்தான். பகவானும் அதைக் கேட்டு,

'𑌭𑌕𑍍𑌤𑌿𑌸𑍍𑌤𑍇 𑌮𑌯𑍍𑌯𑌸𑍍𑌤𑍍𑌯𑍇𑌵 𑌭𑍂𑌯𑍋𑌽𑌪𑍍𑌯𑍇𑌵𑌂 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 ।
𑌵𑌰𑌸𑍍𑌤𑍁 𑌮𑌤𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌹𑍍𑌲𑌾𑌦 𑌵𑍍𑌰𑌿𑌯𑌤𑌾𑌂 𑌯𑌸𑍍𑌤𑌵𑍇𑌪𑍍𑌸𑌿𑌤𑌃' ॥

"என்னிடம் உனக்குப் பக்தி யிருக்கவே யிருக்கின்றது. இன்னும் இப்படியே யுண்டாகப் போகின்றது. ப்ரஹ்லாத! உனக்கு வேண்டிய வரத்தை என்னிடம் கேட்கலாம்." என்று சொன்னார். ப்ரஹ்லாதன், "தேவனே! உனது ஸ்தோத்ரத்தில் நான் ப்ரவர்த்திக்க என்னிடம் நிலைத்த த்வேஷம் வைத்தான். அதனால் என் பிதாவுக்கு நேர்ந்த பாபமானது நாசமடையட்டும். என் சரீரத்தின்மேல் ஆயுதங்கள் போடப்பட்டன. எரிகின்ற தீயில் போடப்பட்டேன். ஸர்ப்பங்களால் கடிக்கப்பட்டேன். எனது போஜநத்துடன் விஷம் கலந்து கொடுக்கப்பட்டது. கட்டப்பட்டு ஸமுத்ரத்தில் தள்ளப்பட்டேன். மலைகளால் மூடப்பட்டேன். இவ்விதமாகவும், வேறு விதமாகவும், ஓ ப்ரபோ! எந்தெந்த அஸாதுகார்யங்கள் உன்னிடம் பக்தியுள்ள என்மேல் த்வேஷத்தால் என்னைக்குறித்துப் பிதாவால் செய்யப்பட்டனவோ, அந்தந்த கார்யங்களின் பலனாக உண்டான பாபங்களினின்று, உன்னுடைய கருணையால் என்பிதா உடனே ரக்ஷிக்கப்படட்டும்" என்று ப்ரார்த்தித்தான். ஸ்ரீ பகவான், "ப்ரஹ்லாத! நீ கேட்டவையெல்லாம் என் ப்ரஸாதத்தால் உனக்குண்டாகப் போகின்றது. ஓ அஸுரகுமாரனே! வேறு வரமும் கொடுக்கின்றேன். நீ விரிக்கலாம்" என்றனர்.

தி. த. ர.

(இன்னும் வரும்)

Wonders of

HYPNOTISM

AND ALLIED OCCULT SCIENCES.

These wonder working Sciences stand in the advance guard for drugless healing methods. With **Occultism** you may accomplish success in every walk of life. **A Profitable Profession** as an Entertainer, Instructor, or Healer. Any one may learn at Home these secrets in a very short time.

Our complete correspondence Course in **Hypnotism, Mesmerism** and allied Occult Sciences containing the secrets of the Hindoo sages and the scientists of the world. Cost Rs. Five only.

PREMIUM :—To every purchaser of this Course we grant Three months free supply of our Anglo-Tamil Monthly journal **Self-Culture**, devoted to Occultism.

Annual Subscription Rs. 3 only.

Address :—

Dr. K. T. Ramasami, D. Sc., Ph. D.,
President,
THE INDIAN ACADEMY OF SCIENCE,
KIZHANATTAM, Tinnevelly Dist., S. India.

ஆத்மயோக மநோவசிய சாஸ்திரம்.

ஆங்கில பாஷையில் ஹிப்னாடிஸம், மெஸ்மெரிஸம் முதலான அதிக அற்புத சாஸ்திரங்களை எளிய தமிழ் நடையில் மொழி பெயர்த்திருக்கிறோம். இத்தமிழ் நூல் "ஆத்மயோக மநோவசிய சாஸ்திரம்" என்று வழங்கி வருகிறது. இது ஒரு அரிய பெரிய தமிழ் கிரந்தமே. போதுமான சாவகாச அப்பியாசங்களினாலும், புத்திநுட்ப விசேஷத்தாலும், இச்சாஸ்திர ஞான ரகஸியங்களை எவரும் எளிதில் அறிந்து அப்பியஸித்து நம்முன்னோராகிய யோகீசுவரர்களின் யோகபலத்தையும், மேன்மையையும் அடையலா மென்பது திண்ணம். இப்புஸ்தகங்களில் அநேகமாய் இந்து யோகிகளின் முறைகளும் தெளிவாய் வரையப்பட்டிருக்கின்றன.

நம் ஆத்மயோக மநோவசிய சாஸ்திர புஸ்தகங்கள்

மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. 1-வது புஸ்தகத்தில்: திடசித்தப்ப்ரீதி, மனோவசியமும், 2-வது புஸ்தகத்தில்: ஹிப்னாடிஸம், மெஸ்மெரிஸமும், 3-வது புஸ்தகத்தில், ஆத்மயோகம், மானஸதந்தி, தூரதிருஷ்டி, தூரசிரவணம், மானஸ சிகித்ஸா சாஸ்திரமும் அடங்கியிருக்கின்றன.

ஆத்மயோக மநோவசிய சாஸ்திர கரஸ்பாண்டென்ஸ் பாட 3 புஸ்தகங்களின் விலை ரூ. 4 மட்டும். கீழ்கண்ட விலாசத்துக்கு உடனே முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

டாக்டர் K. T. ராமஸ்வாமி, D. Sc., Ph. D.,
பிரஸிடெண்டு,
இந்தியா சாஸ்திர கல்விச்சாலை,
கீழ்நத்தம் போஸ்டு, திருநெல்வேலி ஜில்லா, தென் இந்தியா.

Ahobilam Photos.

(Full Plate 10" x 12")

ஸ்ரீ அஹோபிலம் படங்கள்.

	Price per Copy.		
1. Upper Ahobilam Temple view மேல் அஹோபிலம்கோவில் ஸந்நிவேசம்	0	12	0
2. Upper Ahobilam Deities (Ughra Narasimhaswami, Lakshmi Narasimhaswami and Prahladalwan-Group) மேல் அஹோபிலம் பெருமாள்படம்	0	12	0
3. Lower Ahobilam Prahlada Varadaswami கீழ் அஹோபிலம் ஸ்ரீப்ரஹ்லாதவரதன் திருமஞ்சன ஸேவை	0	12	0

☞ Copies of the above Photos can be had on application from the "Vedanta Dipika" Office, Chittoor, Chittoor Dt.

மேற்கண்ட படங்கள் வேதாந்ததீபிகை ஆபீஸில் கிடைக்கும்.

POSTAGE EXTRA. தபால் சார்ஜு ப்ரத்யேகம்.

ஸ்ரீ ஸந்நிதி ஸம்ப்ரதாயஸ்தர்கள் ஒவ்வொருவரும் இந்த படங்களை வாங்கி ஆராதநத்தில் எழுந்தருளப்பண்ணவேண்டும்.

Maps of Ahobilam.

Descriptive maps of Upper and Lower Ahobilam Double Foolscap size, Annas 8 per set. Postage Extra.

Visitors to Ahobilam will find the maps indispensable. They will enable visitors to select the more impartant places of interest to be visited. To those who have not visited Ahobilam the maps will be instructive and will give an idea of the locality.

Every Hindu should possess himself of a set of the maps. Only 200 copies are available for sale. Copies can be obtained from

D. RAMASAWMY AIYENGAR, B.A.
Wallajabad, Chengleput Dt.

Printed for the General Secretary, A. M. S. Sabha, by W. Pushparatha Chetty & Co., K. R. Press, Madras.

477

ஸ்ரீராமஜெயம்.

ஸங்கீத ஸத்ஸம்ப்ரதாய தீபிகை

ஸங்கீத ஸாயித்ய ரஸிக சிகாமணிகளுக்கு ஓர் விண்ணப்பம்

ஸங்கீத ஸாகர ஸாஹித்ய ஸர்வார்த்தஸார ஸங்க்ரஹங்களு மடங்கிய

"ஸங்கீத ஸத்ஸம்பிரதாய தீபிகை"

என்கிற இப் பெரும்நூலை மாதாந்தர ஸஞ்சிகையாக பிரசுரிக்கலானோம்.

பிரதிமாதமும் 20பவுன் கிரௌன் டிம்மி அக்டோவஸ் 7 பாரங்கள் அடங்கிய இந்த ஸஞ்சிகையில் ஸ்ரீ தியாக அய்யரவர்கள், பல்லவி-துரைசாமி அய்யரவர்கள், தீக்ஷிதர்வாள் சாமா சாஸ்திரிகள், ஸுப்ராம சாஸ்திரிகள், பட்டணம் ஸுப்ரமண்ய அய்யரவர்கள், ஸதாசிவராவ், கொப்பபுரி, தர்மபுரி. முதலான பெரியோர்களின் க்ருதிகள் பதவுரையுடனும் புரந்தர விடலதாசர் முதலான இயலிசைப் புலவர்களின் லக்ஷணகீதங்கள், டாயம், ப்ரபந்தம். ஸுளாதிகளும் தானவர்ணம், சவுக்கவர்ணம், முதலியனவும் ஸ்வரஜதிகள். ஜதிஸ்வரங்கள், திவ்யப்பிரபந்தம், சிட்டாதானம், கர்ணாம்ர்த ச்லோகங்கள், அஷ்டபதிகள், தேவாரம், திருவாசகம். அருட்பா, தாயுமானவர், ராகமாலிகை, தில்லானா, பதம், ஜாவளி, இந்தஸ்தானி, பார்ஸி, முதலிய ஸாஹித்யங்களுக்கு ஸ்வரஸாஹித்யமாக பஞ்சதசமகங்களுடன் பிறருதவியில்லாமலே அதி சுலபமாக வாய்ப்பாட்டு கற்றுக்கொள்ளவும். வீணை, பிடில், சுரப்பத்து பாலசரஸ்வதி, சித்தார், ஹார்மோனியம், நாகசுரம், பில்லாங்குழல், ப்யாண்டு, கிளார்நட்டு. முகவீணை, மிருதங்கம், முதலான வாத்தியங்களில் வாசித்து தெரிந்து கொள்ளும்படி பதிப்பித்து மாதாமாதம் பிரசுரமாகி வருகின்றது.

தர்ம்மார்த்த காமமோக்ஷமாகிய சதுர்வித புருஷார்த்தங்களையும் அடைவதற்கு இச்சங்கீதத்திலும் சிறந்ததும் அதி சுலபமானதுமான மார்க்கம் வேறொன்றுமேயில்லாததால் இவ்வரியநூலை வரவழைத்து அதன் பலனை அடைவார்களென்று நம்புகின்றோம்.

வருஷசந்தா ரூ. **3—8—0** தனிப்ரதி ரூ. **0—6—0**

எமது விலாசம்:—

மானேஜர், ஸங்கீத ஸத்ஸம்ப்ரதாய தீபிகை,

வேப்பேரி, மதராஸ், என். சி.

ஸ்ரீ:

பகவத்கீதை தமிழ் மொழிபெயர்ப்பு.

இதில் அடங்கியவை:

ராமாநுஜபாஷ்யம், தேசிகன் தாத்பர்ய சந்த்ரிகை, ஆளவந்தா கீதார்த்த ஸங்க்ரஹ ச்லோகம், தேசிகன் கீதார்த்த ஸங்க்ரஹ ரக்ஷை, தேசிகன் கீதார்த்த ஸங்க்ரஹப் பாட்டு.

முதல் பதினெட்டு ஸஞ்சிகைகள் வெளியாகியிருக்கின்றன.

ராயல் 8 பாரமுள்ள ஸஞ்சிகை	0	6	0
தபால்கூலி வி. பி. சார்ஜ் உள்பட	0	8	0
வருஷச் சந்தா (12 - ஸஞ்சிகை)	4	0	0
தபால்கூலி உள்பட	4	12	0

ப்ரெஸிடெண்ட், சிந்தாத்ரிபேட்டை
ஸத் ஸம்ப்ரதாய வர்த்தநீ,
17, வெங்கடாசல செட்டித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை

ஸ்ரீ

வேதாந்த தீபிகை ஆபீஸில் கிடைக்கும் புஸ்தகங்கள்

	ரூ.	அ.	பை.
1. ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ. இஞ்சிமேடு - ரங்கநாதாசார்யருடைய தமிழ் வ்யாக்யானத்துடன்)	0	2	0
2. ஸ்ரீ த்ராவிடவேத தாத்பர்யம்—(ஸ்ரீ. எஸ். கோபால ஸ்வாமி ஐயங்காரால் எழுதப்பட்டுள்ளது)	0	2	0
3. ஸ்ரீ அஹோபிலமடமும், அதன் பிஷ்யர்களின் கர்த்தவ்யங்களும்:—(ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யரால் செய்யப்பட்ட உபந்யாஸம்)	0	2	0
4. ஸ்ரீ பாகவத தனிஸ்லோகீ - (ஸ்ரீ. சேட்லூர் நரஸிம்ஹாசார்யர்)	0	4	0
5. ஸ்ரீ சதுஸ்லோகீ விவரணம்	0	4	0

இவை வேண்டுமவர்கள் சென்னை, மயிலாப்பூர், கேசவப்பெருமாள் ஸந்நிதிவீதியில் இருக்கும் ஸ்ரீ வேதாந்த தீபிகை மானேஜருக்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

Printed for the General Secretary, A. M. S. Sabha, by W. Pushparatha Chetty & Co., K. R. Press, Madras.